ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

———:o:———

முதலாயிரம் - திருப்பாவை

ப்ரதிபதமும்,

# மூவாயிரப்படி, ஆறாயிரப்படி,

ஸ்வாபதேச வ்யாக்யாநங்களும்;

ஸம்புடம்-உ.] விஷு௵ ஐப்பசி௴. [ஸஞ்சிகை-உ.

சென்னைநகர்:

மெமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

கஅஅக௵ நொவெம்பர்௴

Registered Copy-right.

பாரம்-ரு-இ அணா-ரு.

"மோரார் குடமுருட்டி" என்னக்கடவதிறே. (வாசமித்யாதி) ஆயாஸத்தாலே மயிர்முடி நெகிழ்ந்துபரிமளந்தானேபுறப்பட்டுப்ரவஹிக்கிறபடி. (மத்தினாலோசைபடுத்த) மந்தரத்தாலே கடலைக் கலக்கினாப்போலே, இந்தகோஷமும் செவியில் பட்டதில்லையோ. "ఉద్గాయతీనామరవిన్దలోచనం వ్రజాఙ్గనానాందివమస్పృశద్ధ్వనిః । దధ్నశ్చనిర్మన్థనశబ్దమిశ్రితో నిరస్యతే యేనదిశామమఙ్గళమ్" "உத்காயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ர்ஶத்த்வநி:। தத்நஸ்சநிர்மந்தநஶப்தமிஶ்ரிதோநிரஸ்யதே யேநதிஶாமமங்களம்" என்று-அவன் கண்ணழகிலே தோற்றுப் பாடுகிற த்வநியும் கடைகிற தயிரோசையும், ஆபரண ஓசையும் கிளர்ந்து ஊர்த்த்வலோகங்களிலே சென்று கிட்டுவதான ஓசை

---

பலமில்லை, அகரணே ப்ரத்யவாயமுண்டு; அப்படியே ஜாத்யுசிதமான நித்யாநுஷ்டாநமன்றோ இவர்களுக்குத் தயிர்கடைகை, இது விடிவுக்கடையாளம் போராதோ வென்கிறார்கள் (காசும்பிறப்பும்) அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும். (கலகலப்ப) ஆபரணத்வநியு மிவர்களுக்கு உத்தேஶ்யமாயிருக்கை. (கைபேர்த்து) தயிர்ஸம்ர்த்தியாலும், தங்களுடைய ஸௌகுமார்யத்தாலும், க்ர்ஷ்ணனுடைய அஸந்நிதியாலே கைசோருகையாலும், ஸந்நிதியில் "தயிரை மோராக்கவொட்டேன்" என்று பிடித்து வலிக்கையாலே கடைகையி லுண்டான அருமையைச்சொல்லுகிறது. (வாசநறுங்குழல்) கடைகிற ஆயாஸத்தாலே மயிர்முடி கட்டு நெகிழ்ந்து முடை நாற்றத்தை மறைக்கும்படியாய்த்து பரிமளம் வெள்ளமிடுகிறபடி. "தெருவெல்லாங் காவி கமழ் திருக்கார்க்கணை" என்னக்கடவதிறே. (ஆய்ச்சியர்) ஒருத்தியன்றே என்று சொல்லவொண்ணாதபடி இருந்ததேகுடியாக. (மத்தினாலோசைபடுத்ததயிரரவம்) மந்தரத்தாலேகடலைக்கடைகிறபோது, "அரவூறுசுலாய் மலைதேய்க்குமொலி" என்றபடி. "ఉద్గాయతీనామరవిన్దలోచనం వ్రజాఙ్గనానాందివమస్పృశద్ధ్వనిః। దధ్నశ్చనిర్మన్థనశబ్దమిశ్రితోనిరస్యతేయేన దిశామమఙ్గళమ్" "உத்காயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ர்ஶத்த்வநி:। தத்நஸ்சநிர்மந்தநஶப்தமிஶ்ரிதோநிரஸ்யதே யேந திஶாமமங்களம்." க்ர்ஷ்ணனுடைய கண்ணழகுக்குத் தோற்றுப்பாடுகிற இடைப்பெண்களுடையத்வநி, தயிர்கடைகிற வோசையோடே சலசி பரமபதத்திலே சென்று த்வநித்தது; அப்போது, க்ர்ஷ்ணகுணங்கள் பூமியிலே நடையாடாநிற்க, மலையிலே யிருப்பாரைப்போலே உயர இருப்பதே! என்று அவர்களை வசைபாடினாப்போலே யிருந்தது. [విక్రీతుకామాఖిలగోపకన్యా మురారిపాదార్పితచిత్తవృత్తిః। దధ్యాదికం మోహవశాదవోచద్గోవిన్ద దామోదర మాధవేతి – விக்ரீதுகாமாகில கோபகந்யா முராரி பாதார்ப்பிதசித்த வ்ர்த்தி:। தத்யாதிகம் மோஹவஶாதவோசத்கோவிந்த தாமோதர மாதவேதி] முலையைக்கொன்ற வீரத்திலே தோற்று க்ர்ஷ்ணன் பக்கலிலே பத்தபாவைகளாயிருக்க,

உன் செவியில் படாதொழிவதே!. இவ்வூராகில் "முப்போதும்
கடைந்தீண்டியவெண்ணெய்" என்று - இரவும் பகலும் இடைவிடா
தே தயிர்கடைகை ஸ்வபாவமன்றோ வென்று பேசாதே கிடக்க;

(நாயகப்பெண்பிள்ளாய்)இப்பெண்களுக்கெல்லாம் நிர்வாஹகை
யானபடி இதுவோ வென்கிறார்கள்; சொல்லீற்றுக் கெல்லாம் மறு
மாற்றஞ்சொல்லிக்கிடக்கிறது உன்னுடைய ஐஶ்வர்யச்செருக்காலே
யென்னவுமாம். "பேய்ப்பெண்ணே"என்றத்தோடு "நாயகப்பெண்
பிள்ளாய்" என்றத்தோடு வாசியில்லையிறே அகவாயில் பாவம் ஒன்
றாகையாலே.என்றவிடத்திலும் வாய்திறவாதேகிடக்கையாலே. (நா
ராயணன் மூர்த்தி கேசவனைப்பாடவும் நீகேட்டே கிடத்தியோ) நீ
எழுந்திருப்புதியென்று நாங்கள் பாட,அதுவே குறங்குகுத்தக்கிடந்
துறங்குகிறாயே.(நாராயணன்)முகம்தோற்றாமேநின்று வாத்ஸல்யத்
தாலேரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன்.(மூர்த்தி)தன்னுடைய ஸௌ
ஶீல்யத்தாலேபிறந்தது.(கேசவனை)கண்ணுக்குத்தோற்ற நின்று நம்
விரோதிகளைப் போக்குமவனை. (பாடவும்) இப்படி வாத்ஸல்யத்தை

---

இதினின்று மிவளை மீட்கும் விரகேதோ என்று பார்த்து, தாயார்,
பாலையுந் தயிரையும் நெய்யையுங் கொடுத்து, "இத்தை விற்றுக்
கொண்டுவா" என்று சொல்ல; விற்கப்போனவிடத்திலும் நினைவு
இங்கேயாகையாலே, "கோவிந்தனைக்கொள்ளுங்கோள், க்ர்ஷ்ணனைக்
கொள்ளுங்கோள், ஶ்ரிய:பதியைக் கொள்ளுங்கோள்" என்று கூறிக்
கொண்டு திரிந்தாள். (ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ) இது
கேளாதபடி யுள்ளேயு மொருதயிருண்டோ கடைகிறது. "கெண்டை
இத்யாதி, தாமோதரா மெய்யறிவன்நானே." பண்டுபோலேயோ,
க்ர்ஷ்ணன் பிறந்தபின்பு * வாங்கக்குடம் நிறைக்கும்வள்ளல் பெரும்
பசுக்களாகையாலே அறுபதுநாழிகையும் கறப்பது கடைவதாய்ச்
செல்லு மத்தனையன்றோ, இது விடிவுக்குடலாமோவென்று அவர்
கள் நிருத்தரராம்படி சொல்ல;

(நாயகப் பெண்பிள்ளாய்) என்கிறார்கள். ஆகையாலே சொன்
னதுக்கெல்லாம் மறுமாற்றம் சொல்லிக்கிடக்கிறது உன் செல்வக்
கிடப்பிறே. "பேய்ப்பெண்ணே" என்றத்தோடு, "நாயகப்பெண்பிள்
ளாய்" என்றத்தோடுவாசியற்றிருக்கிறது. ஒரு மிதுநமாய்ப் பரிமாறா
நின்றால், தாழச்சொன்னபோதும் உயரச்சொன்னபோதுமாயிறே
யிருப்பது. [𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌨𑍀𑌚𑌭𑌾𑌵𑍈𑌃-நித்யாபிவாஞ்சித பரஸ்பர
நீசபாவை:] ஶேஷபூதர் ஶேஷிபக்கல் சொல்லுவதொன்றுண்டோ,
இதுக்கெல்லா மழகிதாய் நிர்வாஹகையானாயென்று இவர்கள் பேசா
திருக்க; நான்உங்களுக்கடிமையன்றோ, திறக்கிறேனென்ன; இவள்
துணுக்கென்று எழுந்திருந்து கடுகத் திறக்கைக்காக, கேசிவத வ்ர்த்
தாந்தத்தை ஸ்மரிப்பிப்போமென்று அத்தை ப்ரஸங்கிக்கிறார்கள்

யும் ஸௌசீல்யத்தையும் ஆஸ்ரிதவிரோதி நிரஸநத்தையும் பேசின விடத்திலும்,பின்னையும்இவர்கள்பேச்சே தனக்கு தாரகமாய்க் கிடக்கையாலே (கேட்டேகிடத்தியோ) என்கிறார்கள். இவள் துணுக்கென்றெழுந்திருக்கைக்காக, நிருபாதிகஸ்வாமியான ஸர்வேஸ்வரன் ஆஸ்ரித வத்ஸலனாய் க்ர்ஷ்ணனாய் வந்து அவதரித்த விடத்திலே கேஸிவந்து நலியப்புக, அவனை க்ர்ஷ்ணன் கொன்றான்காண் என்ன; அதுக்கும் பேசாதே கிடந்தாள், (பாடவும்நீகேட்டே கிடத்தியோ) அவனுடைய விஜயத்தைக் கேட்டு, கேஸி வந்து நலியப்புக்கான் என்கிற துணுக்கும் கேட்டு, கரவதாநந்தரம், "𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑍇" "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்று சக்ரவர்த்தித் திருமகனை ஸ்ரீஜநகராஜன்திருமகள் அணைத்தாப்போலே, நீயும் க்ர்ஷ்ணனை யணைக்கப் புறப்படுவாயோ என்று சொன்னோம், அதுவு முனக்கு க்ர்ஷ்ணவிரோத பயந்தீர்ந்து மார்பிலே கைவைத்து உறங்கலாம்படியாய் விடுவதே! யென்றுமாம். (தேசமுடையாய் திற) உன்னைக் காணப்பெறாதே அந்தகாரமாய்க்கிடக்கிற எங்களுக்கு இத்தைத்திறந்துபுறப்பட்டு, உன்னுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே வெளிச்செறிப்பிக்கைக்காகவும், உன்னுடைய அழகு காண்கைக்காகவும் நீயே வந்துதிற. (தேசமுடையாய் திற) இவள் பின்னையும் பேசாதே கிடக்கையாலே ஜாலகரந்த்ரத்தாலே பார்த்தார்கள். இவளுக்கு க்ர்ஷ்ண விஜயாநுஸந்தாநப்ரீதியாலே வடிவிற்பிறந்த புகரைக்கண்டு கிண்ணகத்தை அணைசெய்யாதே வெட்டிவிடா யென்கிறார்க ளாகவுமாம்... ... ... ... ... ... ... ... எ

---

பெரியாழ்வார்பெண்பிள்ளையாகையாலேதுணுக்கென்று உணருமென்று. (நாராயணன்மூர்த்திகேசவனைப்பாடவும்) கண்ணுக்குத்தோற்றாதேநின்று ரக்ஷிக்கும்ஸர்வேஸ்வரன்ஆஸ்ரிதவத்ஸலனாயிங்கேவந்து அவதீர்ணனானான், அங்கே கேஸிவந்து கிட்டினான்கா ணென்கிறார்கள். அதுதன்னை விஜயாந்தமாக அநுஸந்தித்துப் பேசாதே கிடந்தாள் (நீகேட்டேகிடத்தியோ) அழகிதாக உன்னை யெழுப்ப வழி பார்த்தோம், துடைகுத்தி யுறக்கினோமாகாதே. கேஸிபட்டவநந்தரம், கரவதத்தினன்று,பிராட்டி "𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑍇" "பர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்று – பெருமாளை யணைத்தாப்போலே க்ர்ஷ்ணனை யெழுந்திருந்து அணைக்கப்பாராய். பேச்சி லினிமையைக்கேட்டு இவள் வாய்திறவாதே கிடந்தவாறே, ஜாலக த்வாரத்தாலே பார்த்தார்கள்; அவனுடைய விஜயத்தை யநுஸந்திக்கையால் வந்த புகருடைய வடிவிலே காணலாம்படி கிடந்தாள் (தேசமுடையாய்திற) கிண்ணகத்துக்கு அணைசெய்யாதேவெட்டிவிடாய்,நாங்கள்வாழ்ந்துபோக. எங்களுடைய ஹ்ர்தயத்தில் அந்தகாரம்போம்படி உன்வடிவைக்காட்டி எங்களையநுபவிக்கப்பாராய். ... ... ... ... எ

ஸ்வாபதேஸவ்யாக்யாநம்.

அ.—ஏழாம்பாட்டு. (கீசுகீசு இத்யாதி) இப்பாட்டில், பகவத் விஷயத்திலும் பாகவத விஷயம் நன்றென்றறிந்தும் மறந்திருப்பா ரொருவரை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(எங்குமானைச்சாத்தன் கலந்து – கீசுகீசுஎன்றுபேசின பேச்சரவம்கேட்டிலையோ)ஸர்வதோதிக்கமாக,அஹங்கார நிவர்த்த கராானமஹாபாகவதர், "நாம்பிரியப்புகாநின்றோமே!"என்றுபிரிந்தா ல்மறுபடிகூடுந்தனையும்தரித்திருக்கைக்காக பரஸ்பரம்ஸம்ஶ்லேஷித் து,க்த்கதஸ்வரமாகையாலே அநக்ஷரரஸமாக, பேசின பேச்சரவம்– விஶ்லேஷவ்யஸநம் தோற்றும்படியாகப்பேசின பேச்சினுடைய த்வ நியைக் கேட்டிலையோ. (பேய்ப்பெண்ணே) அறிந்துவைத்து, பே சாதே கிடக்கையாலே மதிகேடீ!என்கிறார்கள்.

அவர்களை யெழுப்புகைக்கு நீங்களுண்டே, வேறடையாள முண்டோவென்ன; சொல்லுகிறார்கள் (காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து) திருமந்த்ரமும் த்வய சரமஶ்லோகங்களும் ஒன்றோ டொன்று சேர்ந்து த்வநிக்க, ஸ்வரூபோபாய புருஷார்த்தஜ்ஞாநம் தலையெடுத்து. (வாசநறுங்குழல் இத்யாதி)மிக்கபரிமளத்தை யுடைய பகவத்விஷயவ்யாமோஹத்தையுடைய அநங்யார்ஹ ஶேஷபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள்ஸங்கல்பத்தாலே ஶிக்ஷிதரான ஸம்ஸாரிசேதநரு டைய திவ்யப்ரபந்தாநுஸந்தாநத்வநியைக் கேட்டிலையோ.

(நாயகப்பெண்பிள்ளாய்) இது வன்றோ நமக்கு நீ நிர்வாஹ கையானமைக்கடையாளம். அதாவது-சொன்னதுக்கெல்லாம் மறு மாற்றஞ் சொல்லி யெழுந்திராமலிருக்கை. (நாராயணன் மூர்த்தி கேசவனைப்பாடவும் நீகேட்டே கிடத்தியோ) ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுடைய அவதாரமாய் கேஶிஹந்தாவான க்ர்ஷ்ணனைப் பாடச்செய்தேயும்,"ஙஂஜ்ஞூ-தம்த்ர்ஷ்ட்வா"என்கிறபடியே க்ர்ஷ்ண விஜயத்தைக்கேட்டுப் புறப்பட்டு அவனை யணைக்கக்கடவநீ, அதுவே துடைகுத்தாக பகவதபாய பயந்தீர்ந்து உறங்கக் கடவையோ. (தேசமுடையாய் திற) இப்படிசொன்னவிடத்திலு மெழுந்திராமை யாலே ஜாலகரந்த்ரத்தாலே பார்த்து, பகவத்குணாநுபவத்தாலு ண்டான மஹாதேஜஸ்ஸை யுடையவளே, இத்தேஜஸ்ஸு, காட் டிலெறித்த நிலாவாகாமே நாங்களநுபவிக்கலாம்படி எங்கள் அஜ்ஞா நத்தை நீக்காயென்கிறார்கள். ... ... ... ... ... எ

அ.—எட்டாம்பாட்டு. எல்லாரும் வந்தழைக்கும்படி க்ர்ஷ்ணனாலே வேண்டப்பாடுடையா ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—கீழ்வானம்வெள்ளென்றெருமைசிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ளபிள்ளைகளும்
போவான்போகின்றாரைப் போகாமற்காத்துன்னைக்
கூவுவான்வந்துநின்றோம் கோதுகலமுடைய
பாவாயெழுந்திராய் பாடிப்பறைகொண்டு
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச் சென்றுநாஞ்சேவித்தால்
ஆவாவென்றாராய்ந்தருளேலோரெம்பாவாய். (அ)

ப-ரை.—எல்லாரும் வந்தழைக்கும்படி க்ர்ஷ்ணனாலே வேண்டப்படுவாளொருத்தியை, கீழ் - கீழ்த்திசையில், வானம் - ஆகாசமானது, வெள்ளென்று - வெளுத்தது எழுந்திராயென்ன; * மதிமுக மடந்தையரான உங்களிலே ஒருத்தி அத்திக்கைப்பார்க்கையாலே முகத்தினொளி அத்திசையில்தாக்கிக்கிழக்குவெளுத்ததாகத் தோற்றிற்றித்தனை,வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோளென்ன; எருமை - எருமைகள், சிறு-வைகறையில், வீடு-விடப்பட்டு, மேய்வான்-பனிப்புல் மேய்கைக்காக, பரந்தனகாண்-தன்னிச்சைப்படி நாற்றிசையிலும்பரவினகாண் எழுந்திராயென்ன; நான்புறப்பட்டுவருகைக்குஉங்களையொழிந்தாரெல்லாரும் போனார்களோ வென்ன; மிக்குள்ள பிள்ளைகளும்-உன்னையொழிந்தாரெல்லாரும், திருவேங்கட யாத்ரைபோலே, போவான் - போகையேப்ரயோஜநமாக,போகின்றாரை-போகிறவர்களை, போகாமல்காத்து-போகாதபடிதடுத்து,உன்னை-அவனருளுகைக்கு ஹேதுபூதையானவுன்னை, கூவுவான்-அழைக்கைக்காக,வந்து-உன் வாசலிலேவந்து,நின்றோம்-நிற்கிறோம்,கோதுகலமுடைய-கௌதூஹலமுடைய,பாவாய்-பெண்பிள்ளாய், எழுந்திராய்-எழுந்திரு என்ன; எழுந்திருந்து செய்வதென்னென்ன; க்ர்ஷ்ணகுணங்களை, பாடி-வாயாரப்பாடி, பறைகொண்டு - அவனை ஸேவிக்கையாகிற நோன்பை மேற்கொண்டு, மா-குதிரை வடிவோடுவந்த கேசியென்னும் அஸுரனுடைய,வாய்-வாயை, பிளந்தானை - இருபிளவாகக் கிழித்துப்பொகட்டவனாய், மல்லரை-சாணூரமுஷ்டிகரென்னும் மல்லர்களை, மாட்டிய - நிரஸித்தவனாய், தேவாதிதேவனை - ப்ரஹ்மாதி தேவர்களுக்கு தேவனானவனை, நாம்-அவன் வரவிருக்கக்கடவநாம், சென்று - அவன்பக்கலிலே சென்று, சேவித்தால்-ப்ரபத்திபண்ணினால், ஆ! ஆ! என்று - ஐயோ!! என்று இரங்கி, ஆராய்ந்து - நம்முடைய குறைகளை விசாரித்து, அருளும் - க்ர்பைபண்ணுவன் என்கிறார்கள்.

---

அ.—எட்டாம்பாட்டு. இதுக்குமுன்பு உணர்ந்த பெண்களெல்லாம் திரண்டு, தங்கள் அபிமதலாபம், யாவளொருத்தி முன்னாகப் பெறலாயிருக்கிறது, அதுக்கீடாக க்ர்ஷ்ணன் கொண்டாடும்படி செல்வக் கிடப்புடையா ளொருத்தியை யெழுப்புகிறார்கள். ஸம்ஸாரிகளுக்கு ராத்ரியில் பரஹிம்ஸாதி சிந்தநமும், நரகாவஹமான விஷயாநுபவமும், தமோகுணாபிபவத்தால் வந்த நித்ரையுமாய்ச் செல்லுகையாலே, ராத்ரிதண்ணியதென்றுபுருஷார்த்தோபயோகியான பகல்

வ்யா.—(கீழ்வானம்வெள்ளென்று) கிழக்கு வெளுத்தாலும் கிடந்துறங்கு மித்தனையோ, எழுந்திரா யென்கிறார்கள். கிழக்கு வெளுத்ததன்று,உங்களிலே யாரேனும் அத்திக்கைப்பார்க்கையாலே உங்கள் முகத்திலொளி ப்ரதிபலிக்கையாலே கிழக்கு வெளுத்ததாயிருக்கிறது; இவர்கள் தாங்கள் * திங்கள் திருமுகத்துச் சேயிழையாரிறே; அது அந்யதாஜ்ஞாநம், மற்றடையாளமுண்டோ வென்ன;

(எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்) பனிப்புல்மேயக் காலத்திலே விட்டு வயல்களெங்கும் பரந்தனகாண். ஸ்ரீநந்தகோபர்க்கு(க) முத்திறமுமுண்டே, அவற்றின் பின்னே க்ர்ஷ்ணன்போம், பின்னை யாரைக் காண்பது எழுந்திராயென்ன; உங்கள்முகத்திலொளியைக்கண்டு இருள் திரண்டு போகிற தித்தனை; அதுவும் அந்யதாஜ்ஞாநம். அருணோதயத்துக்கஞ்சி இருள் சிதறிப்போகிற தென்னவுமாம். "மேட்டிளமேதிகள் தளைவிடுமாயர்கள்" என்று-இவள்தமப்பனார்எம்பெருமானையெழுப்பினார்;இவள்இவர்களை யெழுப்புகிறாள்.

---

விருப்பத்துக்கு உடலாயிருக்கும், இவர்கள் க்ர்ஷ்ணாநுபவம்பண்ணப் பெறுகையாலே ராத்ரி அடிக்கழஞ்சு பெற்று, விடியில் கோபவ்ர்த்தர்கள் விரோதிப்பார்களென்று விடியப் புகாநின்றதென்று பயப்பட்டு, க்ர்ஷ்ணனையும் நம்மையுஞ் சேரவொட்டாதவர்கள் உணருங் காலம்வந்துதோற்றச்செய்தேநீகிடந்துஉறங்குகையாவதென்னென்ன; அவள் உள்ளேகிடந்து அக்காலம் வருகையாவ தென்னென்ன;

வ்யா.—(கீழ்வானம்வெள்ளென்று)இதுக்கு முன்புவிடிவுக்குடலாகச்சொன்னதுபோலன்று,கிழக்குவெளுத்ததுகாணென்கிறார்கள். "அஞ்சுடர வெய்யோனணி நெடுந்தேர் தோன்றாதால்" என்று போது புக்கபோதே பிடித்து கீழைத்திக்கைப் பார்த்துக் கொண்டிருப்புதிகோள், * திங்கள் திருமுகத்துச்சே யிழையாரான உங்களுடையமுகஜ்யோத்ஸ்நை கீழைத்திக்கிலே சென்று தட்டிஉங்கள்முகத்திலேவந்து ப்ரதிபிம்பிக்கையாலே கிழக்கு வெளுத்ததுபோலே தோற்றுகிற தித்தனை, கிழக்கு வெளுத்ததன்று, இது உங்களுடையஅந்யதாஜ்ஞாநம், இத்தையொழிய விடிவுக்கு வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கோளென்ன;

(எருமைசிறுவீடு)எருமைகள்பனிப்புல்மேய்கைக்காக வயலெங்கும் பரந்தன. இது விடிவுக்கடையாள மன்றோ வென்கிறார்கள். "மேட்டிளமேதிகள்தளை விடுமாயர்"என்று-பெரியபெருமாளை இவள் தமப்பன்மாரிலே ஒருவரெழுப்பினார்; இவளை யிவர்களெழுப்புகிறார்கள். இது ஆழ்வார்களுக்கும் இவளுக்கும் வாசி.(சிறுவீடு) பெரியாழ்வார் மகளாய் அக்நிஹோத்ர ஹோமங்களுக்கு உண்மானம் புற

---

(க) முத்திறம்-ஆட்டுத்திறம், மாட்டுத்திறம், எருமைத்திறம்.

நாங்கள் ப்ரமித்தோமாயிடுக, நீ விடிந்ததில்லையென்றறிந்தபடி யெங்ஙனே யென்ன; பஞ்சலக்ஷம் குடியிற்பெண்களில் உங்களையொழிய அல்லாதாருணராமையாலே யென்ன;

(மிக்குள்ள பிள்ளைகளும்) உன்னை யொழிந்தாரெல்லாரும் ஆற்றாமையாலே போனார்கள், நீயே எழுப்பக்கிடந்தாய். (போவான் போகின்றாரை) அர்ச்சிராதிகதி, அக்ரூரயாநம், திருவேங்கடயாத்ரைபோலே போகையேப்ரயோஜநமாகப் போகாநின்றார்கள், நான் இனியெங்கேபோக, அவர்கள் போனார்களாகிலென்ன; (போகாமற் காத்து) "செய்யாதன செய்யோம்" என்று அடியில் நம்முடைய வ்யவஸ்தையை யுணர்த்தி நீவந்திலையேயென்று அவர்கள் போகாதபடி தடுத்து. (உன்னைக் கூவுவான்) உன்வாசலிலேவந்தெழுப்பினோமென்னும் தரம் பெறுகைக்கு. (வந்து) "ఉత్తరంతీరమాసాద్య" "உத்தரந்தீரமாஸாத்ய" என்னுமாப்போலே. (நின்றோம்) "కస్థైవవ్యతిష్ఠత" "கஸ்தைவவ்யதிஷ்டத" என்று நிலைபெற்று நின்றோம்.

---

மானமாராய்கை தவிர்ந்து, இடைச்சியாய், எருமையினுடைய சிறுவீடு பெருவீடென்னு மிவற்றில் வாசியறிகை யாத்ரையானபடி. (பரந்தனகாண்) படஅடிப்பட்டாலு முறங்குமத்தனையோ. நம்முடைய உத்தேஶ்யவஸ்து அவற்றின் பின் கைகழியப்போனால் என்படக்கடவோம். ஸ்ரீ நந்தகோபர்க்கு முத்திறமு முண்டாகையாலே க்ர்ஷ்ணன் அவற்றின் பின்னேபோம், பின்னை நாமாரைக் காணப்போகிறது, கெடுவாய்! எழுந்திராய். எருமை, பனிப்புல் மேய்கைக்கு வயலெங்கும்பரந்தன வென்று சொன்ன விது விடிவுக்கடையாளமன்றோ வென்ன; உங்களுடைய முகஜ்யோத்ஸ்நையாலே சிதறிப்போகிற விருளத்தனை, இவையல்லது எருமைகளன்று, இது உங்களுடைய விபரீதஜ்ஞாந மிருக்கிறபடி, விடிவுக்குஉடலன்றென்ன;

கீழ்ச்சொன்னவை யெங்களுடைய அந்யதாஜ்ஞாநமும் விபரீதஜ்ஞாநமு மாகிறது, விடிந்ததில்லை யென்கைக்கு அடையாளம் நீ சொல்லாயென்ன; அஞ்சுலக்ஷம் குடியிலுள்ள பெண்களுக்கெல்லாம் அவதியில்லை, இங்கெல்லாமாக ஆயிரம்பேர் போராதுகாண் வந்தது, அல்லாதாருணர்ந்துவர வேண்டாவோ, அவர்களுணர்ந்துவாராதொழிந்தது விடியாத்துக் கடையாளமென்ன; (மிக்குள்ள பிள்ளைகளும்) உன்னையொழிந்தாரடையப்போனார்காணென்ன; அவர்களோத வந்தவர் மறுத்தோதுகிறார்கள், அவர்கள்என்னையழையாதேபோனார்களே யென்ன; பெருந்திர ளாகையாலே, நீபோய்த்தில்லை யென்றறியாமையாலும், போகிறவர்களோடே கூடப்போகைதானும் ப்ரயோஜநமாகையாலும் போனார்களத்தனை, உன்னையாராயாதே போனார்களல்லவென்ன; என்ன கார்யத்துக்குத்தான் அவர்போய்த்தென்ன (போ

எல்லார்க்கும் க்ர்ஷ்ணனோட்டை ஸம்பந்த மொத்திருக்க, நீங்கள் என்பக்கல் ஸாபேக்ஷராய் வந்தோமென்று சொல்லக் கடவிகளோவென்ன (கோதுகுலமுடைய பாவாய்)உன்னை முன்னிட்டுக்கொண்டு செல்ல, க்ர்ஷ்ண விஷயீகாரமுண்டென்னும்படி அவனாலே கொண்டாடப் படுமவளிறே. பத்நித்வ மவிஶிஷ்டமானாலும் க்ர்ஷ்ணவல்லபை நீயன்றோ. நாங்கள் அவனுக்கு நல்லோம், நீ அவனோட்டைஸம்பந்தத்தாலே எங்களுக்கு நல்லையாயிருப்புதி; ஆகையாலே அவனிலும் ததீயனையுகக்குமென்னும் வேண்டப்பாடுடையை நீயன்றோ. (பாவாய்) "𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌵𑌧𑍂𑌃" "நாரீணாமுத்தமா

---

வான்போகின்றார்) வழிபோகையே உத்தேஶ்யமாகப் போனார்கள். தேஶப்ராப்தியிலும் அர்ச்சிராதிமார்க்கமே போகரூபமாயிருக்கக்கடவதிறே. கைகழியப் போனார்களாகில்இனி நான்என், என்னையொழியவும் போகவல்லார்க ளானார்களேயென்ன; அது செய்தபடி கேட்டிலையோ, நீவாராமை யறிந்தவாறே "இன்னாள் வந்திலள்" என்றோம், பின்னை போகமாட்டிற்றிலர்கள் ( போகாமல்காத்து ) அவர்களைத் தலைக்காவலிட்டோசெய்தது, "திருவாணைநின்னாணை" என்று ஆணையிடவேணுமோ. "நீபோந்திலை" என்று ஒருவார்த்தை சொல்லுங்காட்டில் திடுக்கிட்டாரைப்போலே கால்நடை தாராமல் நின்றார்கள்; போவார்க்குக் காலையொழியப் போகப்போமோ. அவர்களை யங்கே நிறுத்தினிகோளாகில், நீங்கள் இங்கேவந்த தென்னென்ன(உன்னைக்கூவுவான்)போகைதானே உத்தேஶ்யமாகப் போனாப்போலே, உன்னைக்கூவுகைதானே ப்ரயோஜநமாக வந்தோம். ( வந்துநின்றோம்) "𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌤𑍀𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌖𑌸𑍍𑌥 𑌏𑌵 𑌵𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌤" "உத்தரம்தீரமாஸாத்யகஸ்த ஏவவ்யதிஷ்டத" என்னும்படியே உன்பக்கலிலே வந்து கால்கள் தரையிலே பாவிநிற்கப்பெற்றோம். ராவணபவநத்தைவிட்டுப் பெருமாளெல்லையிலே புகுந்தபின்பிறே அவன் தரித்துநின்றது. "நீபோந்திலை" என்றபோதைத் துணுக்குத் தீர உன்வாசலிலே வந்து நல்தரிக்கப்பெற்றோம்.

அப்பெண்கள் திரளெல்லாங்கிடக்க என்வாசலிலே வந்து கால்பாவுகைக்கு ஏற்றமென்,நீங்களென்னையொழியத் தரியாதிருக்க,நான் உங்களுக்குப் புறப்பட்டு முகங்காட்டா திருந்தேனென்று போர வெறுத்திகோளிறேயென்ன (கோதுகுலமுடையபாவாய்) உன்வாசலிலேபுகுந்துபோகவே க்ர்ஷ்ணன்பக்கல் முகம்பெறலாம்படியன்றோ உன் மதிப்பு, எங்களுக்கு வெறுப்பென், உன்வாசலிலே வந்து உன் பேரைச்சொல்லி அழைக்கைக்குமேற்பட வேற்றமுண்டோ எங்களுக்கு. அவனும் ஶிரஸாவஹிக்கப்படுவாளாய், எங்களுக்கு உன்னையொழியச் செல்லாதபடி யிருப்பாயாய், எங்களுக்கு க்ர்ஷ்ணன் பக்கல் புருஷகாரபூதையாயிருப்பா ளொருத்தியன்றோ நீ. (பாவாய்)

வதூ:” என்கிறபடியே நிருபாதிகஸ்த்ரீத்வமுடையளாகை. பாரதந்த்ர்யபராகாஷ்டையுடையளன்றோ வென்கை. (எழுந்திராய்) இப்போது எழுந்திராயாகில் அவையெல்லாம் அஸத்ஸமமாங்கிடாய். * பெண்ணின் வருத்தமறியாதவனைப்போலேயன்றியே அறியக்கடவ நீ கிடக்கக்கடவையோ. ( எழுந்திராய் ) எழுந்திருக்கும்போதை பரிஸ்பந்தங் காண்கைக்காக நாங்களுணர்த்த உணர்ந்தாயாகிற ஏற்றத்தை எங்களுக்குத்தாராய்.

எழுந்திருந்து செய்வதென்னென்ன (பாடிப்பறைகொண்டு) இதுக்கு முன்பு நாம் பெற்ற ஐஶ்வர்யம்போலேயோ இப்போது நாம்பெறப் புகுகிற ஐஶ்வர்யம். முன்பு, “க்ர்ஷ்ணன்கிடாய், பெண்கள்கிடாய்” என்கிற நாட்டார்க்குத் தெரியாதபடி நெஞ்சாலே க்ர்ஷ்ணனை யநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதியானது புறம் பொசியாதபடி யடக்கிப்போந்தோம்; இப்போது நாட்டார்தாங்களே அநுமதிபண்ணுகையாலே வாய்க்கால்வெட்டி நெஞ்சிலே கங்கும்கரையுமறப்பெருகுகிற க்ர்ஷ்ணகுணாநுபவப்ரீதிக்குப்போக்குஅணைவெட்டிவிட்டு க்ர்ஷ்ணகுணங்களைநாம்வாயார நினைத்தபடிபாடக்கடவோம். பறைகொள்ளுகையாவது-நாட்டார்க்குநோன்பு; தங்களுக்குஸேவிக்கையேபலம்.பாடுவதெத்தையென்ன(மாவாய்பிளந்தானைமல்லரைமாட்டிய) க்ர்ஷ்ணனுடையவீரசரிதங்களைப்பாடி. (மாவாய்பிளந்தானை)

---

நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தையுடைய வுனக்கு எங்களாற்றாமை தெரியாமையில்லையிறே. * பெண்ணின்வருத்த மறியாதவன்படியாகவோ நீயும். “முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத்தெரியாதிறே” என்று பட்டர். ஒருபிறவி பிறந்தறியவேணுமிறே யதுக்கு. (எழுந்திராய்) புறப்பட்டு எங்கள்திரளிலே வந்து கலக்கவேண்டா, அங்கப்ரத்யங்கங்களினுடைய பரிஸ்புரணங்களேயமையும். (எழுந்திராய்) நாங்கள் உன்வாசலிலே வந்தெழுப்ப, நீயெழுந்திருந்தா யென்னும் ஏற்றமெங்களுக்குத் தாராய்.

எழுந்திருந்து நாமெல்லாங்கூடிப் பெறப்புகுகிறப்ரயோஜநமென்னென்ன (பாடி) “க்ர்ஷ்ணன், பெண்கள்” என்று வாய்க்காவலிட்டுக் கிடக்கிற வூரிலே இவ்விரண்டுநாளுங் கழிந்தால் அவனை நமக்குப் பாடக்கிடைக்குமோ. ஆஸுரப்ரக்ர்திகளான ஹிரண்யாதிகள் படைவீடுகள்போலேதிருநாமஞ்சொல்லப் பொரார்களாய்த்து.பெண்கள் ப்ரஸங்கத்திலே மோஹிப்பர்களென்று அவ்விழவுதீர “కృష్ణనామ పునఃపునః” “க்ர்ஷ்ணநாமபுநஃபுநஃ” என்கிறபடியே வாயாரத் திருநாமத்தைப் பாடி. (பறைகொண்டு) நாட்டுக்குப்பறை, தங்களுக்கு கைங்கர்யம். கிட்டினவாறே “உன்றன்னோடுற்றோமே யாவோம்” என்னக்கடவர்களிறே. இவை, பின்னை அவன் நமக்குத் தரப்புகாநின்றானோவென்ன (மாவாய்பிளந்தானை) நம்விரோதிகளைப்போக்கி

நமக்காக கேஶியைப்பிளந்து, நம்மையும் தன்னையுமுண்டாக்கித் தந்தவனை. தன்னை நாம்கிட்டியநுபவிக்கைக்கிடாக, இடையில் வன்னியமறுத்த ஆண்பிள்ளையைப்பாடக்கடவோம். (மல்லைமாட்டிய) "సఖ్యుఃపశ్యత" "ஸக்யுஃபஶ்யத" என்கிறபடியே அவ்வூரில் பெண்களுக்கு உதவினபடி; அது தங்களுக்கு உதவிற்றென்றிருக்கிறபடி. (தேவாதி தேவனை) "జాతోసిదేవదేవేశ" "ஜாதோஸிதேவதேவேஶ" என்றும் "సోహంతేదేవదేవేశ" "ஸோஹந்தேதேவதேவேஶ" என்றும் சொல்லுகிறபடியே * அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கிறவனை. "నగర స్త్రీకలాలాప మధుశ్రోత్రేణపాస్యతి। మధురాంప్రాప్యగోవిన్దః కథంగోకులమేష్యతి" "நகரஸ்த்ரீகலாலாப மதுஶ்ரோத்ரேண பாஸ்யதி। மதுராம்ப்ராப்ய கோவிந்தஃ கதம்கோகுலமேஷ்யதி" என்கிறபடியே பெரிய மேன்மையுடையனா யிருக்கிறவன் ஸ்ரீமதுரையிலே போய் குவலயாபீட சாணூரமுஷ்டிகரை யழியச்செய்து, படைவீட்டிற் பெண்பிள்ளைகளோட்டைப் பழக்கத்தாலே பெரியவிதக்தனானவன் இடக்கையும் வலக்கையுமறியாத நம்பக்கலிலே வரக்கூடுமோ வென்ன (சென்று) விரஹந்தின்ற குறைக்கொள்ளியான நம் ஶரீரத்தை யவன் கண்டு புண்படும்படி அவனிருந்த விடத்தே செல்லக்கடவோம். அவன் வேண்டப்பாட்டிலேஇருக்கிலோவென்னில்(சென்று)அவன்வர ப்ராப்தமாயிருக்க நாம்சென்று. "ఉపస్థేయఉపస్థితః" "உபஸ்தேயைருப

---

நம்மச்சந்தவிர்த்த வுபகாரகனன்றோ, தாராரோ. (மாவாய்) ஸ்ரீ நாரதபகவான்"நாம்முடிந்தோம்"என்றுகதறிக்கொண்டுவந்து விழும்படியிறே, வந்து தோன்றினபடி. நமக்காகக் கேஶியைக்கொன்று திருவாய்ப்பாடியிலும்ஸ்ரீப்ர்ந்தாவநத்திலுமுண்டான வன்னியமறுத்து, பெண்ணும் பேதையும் சகடச்சாத்தாகப் போம்படி பண்ணினவன், நங்காரியம் செய்யாரோ. அதுபண்டிறே,இப்போது அவனல்லனே. "మధురాంప్రాప్యగోవిన్దః కథంగోకులమేష్యతి। నగర స్త్రీకలాలాప మధుశ్రోత్రేణపాస్యతి" "மதுராம்ப்ராப்யகோவிந்தஃ கதம்கோகுலமேஷ்யதி। நகரஸ்த்ரீகலாலாபமதுஶ்ரோத்ரேணபாஸ்யதி"என்கிறபடியே பெரிய நாகரிகனாய், படைவீட்டிலே யேறி நகரஸ்த்ரீகளுந் தானுமாய்ப்போனவன், நம்மைப்பார்க்குமோ, நங்காரியஞ்செய்யுமோவென்ன (மல்லைமாட்டிய) அங்கு, [ నసమంయుద్ధమిత్యాహుః - நஸமம்யுத்தமித்யாஹுஃ ] அங்கு, போயும் நம்மோட்டைப்பெண்கள் கார்யமன்றோ செய்தது, அதுவும் நம்பேறன்றோ வென்ன (தேவாதிதேவனை) இப்போது அவனை ப்ராஹ்மணர் ஸர்வேஶ்வரனென்று காணுஞ் சொல்லுவது. (தேவாதிதேவனை) "విదుఃకృష్ణంసర్వే దేవకీపుత్రఏవ" "కృష్ణఏవహి" "விதுஃக்ர்ஷ்ணம்ஸர்வே தேவகீபுத்ரஏவ" "க்ர்ஷ்ணஏவஹி" என்றும், "యతోవాఇమాని" "யதோவாஇமாநி" இத்யாதிகளில் படியே காரணபூதனென்று உபாஸ்யனாகக்காணுஞ் சொல்லுகிறது. அப்படி

ஸ்திதঃ" என்றும், "పద్భ్యామభిగమాచ్చైవ" "பத்ப்யாமபிகமாச்சைவ" என்றும்இவர்கள்செல்லுகை அத்தலைக்குமிகுதியாயிறேயிருப்பது. (நாம் சேவித்தால்) அத்தலை இத்தலையானால். (ஆவாவென்றாராய்ந்தருளும்) "நம்மாலேபேறு" என்று நாம்வரப்பார்த்திருக்குமவர்கள், "நாமிருந்தவிடத்தேவந்தது இவர்கள்செல்லாமையிறே" என்றிரங்கி நமக்கு முகந் தருங்காண். ப்ரணயித்வம் பேறானாலும் ஆர்த்த ரக்ஷணம் தவிருமோ. "ఆనృశంస్యం పరో ధర్మః" "ஆந்ருஸம்ஸ்யம் பரோதர்மঃ" என்று சொல்லிவைத்து, அநுஷ்டியாதொழியுமோ. ஆனபின்பு, அவனருளுக்கு ஹேதுபூதையான நீயெழுந்திராய். ஆவாவென்று ஆராய்ந்தருளும்; கோதுகுலமுடைய பாவாயெழுந்திராய் என்று அந்வயம். ... ... ... ... ... ... ... அ

---

பெருமை யுடையவன், அபலைகளான நம்மைப் பார்க்குமோ வென்ன; அது நம்பேறன்றோ, அவனிருந்தபடியே உத்தேஶ்யனன்றோ நமக்கு, நாம்போய் ஸேவிக்கிறோம் (சென்று நாம்சேவித்தால்) அத்தலையித்தலையாய், அவன் வருகையுஞ் ஸேவிக்கையும் தவிர்ந்தால், நாம் சென்று ஸேவிக்குமத்தனை யன்றோ. அப்படி ஸேவித்தால், நங்கார்யஞ் செய்யாதொழியுமோ. செய்திலனாகில் ஸ்ரீபரதாழ்வான் பட்டதுபடுகிறோம். "శిరసా యాచతస్తస్య వచనం న కృతం మయా" "ஶிரஸாயாசதஸ்தஸ்ய வசநம்நகர்தம்மயா" என்னும்படியே அவன் நெஞ்சிலே புண்படுத்துகிறோம். "ఏభిశ్చ సచివైస్సార్థమ్" "ஏபிஶ்சஸசிவைஸ்ஸார்த்தம்" - கீழ்ச்சொன்னவையெல்லாம் நமக்கில்லையேயாகிலும் ஆர்த்தி கண்டால் காகத்துக்கிரங்கினமாத்ரம் நமக்கிரங்கானோ. (ஆவாவென்றாராய்ந்தருள்) "కృపయా పర్యపాలయత్" "க்ர்பயாபர்யபாலயத்" என்று- உகவாதார் பெறுவது உகந்தார்க்குக் கிடையாதோ. முறைகெட நாம் சென்று ஸேவித்தால், வந்தேறியான ப்ரணயித்வமன்றோ போகலாவது, ஆர்த்தர்பக்கல் பண்ணும் க்ர்பையும் போமோ. தானுளனானால் உண்டானதுபோமோ. பாடிப்பறைகொள்ளுகிறோம் - போய் ஸேவிக்கிறோம்; அத்தலைக்கு ப்ரியமாக கைங்கர்யம்பண்ணுகிறோம். இப்படிகளாலே அத்தலையை யுகப்பிக்கையிறே ஸ்வரூபம். * ப்ரஹர்ஷயிஷ்யாமியிலேயிறே அந்வயம். [ప్రియతేసతతం రామః - ப்ரியதேஸததம் ராமঃ] பலங்கொடுக்க அவஸரம்பெறான் என்கிறது. ஆனபின்பு எழுந்திராயென்கிறார்கள். ... ... ... ... ... ... ... அ

ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அ.—எட்டாம்பாட்டு. (கீழ்வானமித்யாதி) இப்பாட்டில் பாகவத ஶேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வமுடைய ளாகையாலே, பகவதபிமதரானவளை எழுப்புகிறார்கள்.

வ்யா.—(கீழ்வானம் வெள்ளென்று) "வெள்ளென்று" என்றது- வெள்ளென்றது என்றபடி. அசேதநத்துக்கும் சைதந்யமுண்டாம்

படி ஸத்த்வோத்தரமான காலமாயிற்று, எழுந்திரா யென்ன; அசேதநத்துக்கு சைதந்யமுண்டாய்த்து, ஸத்த்வோத்தரமான காலக்ர்தமல்ல, "மரங்களுமிரங்கும்வகை" என்கிறபடியே உங்கள் ஸ்வாநுமாநக்ர்தம்; வேறுடையாளமுண்டோவென்ன;

(எருமை சிறுவீடுமேய்வான் பரந்தனகாண்) அஜ்ஞாநமானது ஸத்த்வோதயகாலத்திலே விடப்பட்டு, தனக்கு அபாஸ்ரயம் தேடிப் போகாநின்றதுகாணென்ன; அதுவும் உங்கள் ஸந்நிதியாலே ஸந்நிஹிதசேதநரஜ்ஞாநம் போம், உங்களைப்பிரிந்தவாறே பழையபடியே யுண்டாம், அது ஸத்த்வகுண க்ர்தமன்றென்ன; ஆனால் விடியாமைக் கடையாளமென் சொல்லுகிறாயென்ன; உங்களை யொழிந்த பகவத்ப்ரவணருணராமையென்ன;

(மிக்குள்ள பிள்ளைகளும்) நம்மையொழிந்த பாகவதரெல்லாரும் போனார்களென்ன. (போவான் போகின்றாரைப்போகாமல் காத்து) பகவத்ஸந்நிதிக்குப் போகையே ப்ரயோஜநமாகப்போமவர்களை, பாகவதரை முன்னிட்டல்லது திருவடித் தொழக்கடவோமல்லோமென்கிற நியமத்தை யுணர்த்தி, போகாமல் தடுத்து. (உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்) உன்னை யெழுப்பினோமென்கிற அதிஶயம் பெறுகைக்காக உன்வாசலிலே வந்து நின்றோம். (கோதுகலமுடைய பாவாய்) பகவதபிமாந விஷயபூதராய் அநந்யார்ஹரான ஸ்வாமிநீ. (எழுந்திராய்) நீயெழுந்திருந்தால் நமக்கேதேனுங் குறையுண்டோ. எழுந்தால் செய்யவேண்டுவதென்னென்ன, சொல்லுகிறார்கள்;

(பாடிப்பறைகொண்டு) பாடுகையாகிற புருஷார்த்தத்தை லபித்து. (மாவாய் பிளந்தானை) அஹங்காரநிராஸகனை. (மல்லரைமாட்டிய) காம க்ரோத நிவர்த்தகனை. (தேவாதி தேவனை) நித்யஸூரி நிர்வாஹகனை. (சென்று) ப்ராப்யத்வரையாலே சென்று. (நாம்) அவன்வர இருக்கக்கடவ நாம். (சேவித்தால்) அத்தலை இத்தலையானால், ஆவாவென்று க்ர்பை பண்ணி. (ஆராய்ந்தருள்) விசாரிக்கும். ... ... ... ... ... ... அ

---

அ.—ஒன்பதாம்பாட்டு. "க்ர்ஷ்ணன் வந்தபோது வருகிறான்" என்று அநாதரித்துக் கிடக்கிறா ளொருத்தியை எழுப்புகிறார்கள். அதாவது-ஸ்வரூபத்தை யுணர்ந்துவந்து அநுபவிக்கையும் அவன்

---

அ.—ஒன்பதாம்பாட்டு. பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லாரும் திரண்டு, உன்னை யொழிந்தாரடங்கலு மிங்ஙனே வந்துகிடக்கக் கிடந்துறங்குவதே! என்று பழியிட்டெழுப்புகிறார்கள். புறம்புநிற்கிறவர்கள், இளையபெருமாளைப்போலேயும்(க)முமுக்ஷுக்களைப்போலே

---

(க) முமுக்ஷுக்கள் - மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள்.

கார்யமிறே. "తత్తస్యసదృశంభవేత్" "தத்தஸ்யஸத்ர்ஶம்பவேத்" என்றிருப்பாளொருத்தியென்கை.

மூ.—தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரியத்
தூபங்கமழத்துயிலணைமேற்கண்வளரும்
மாமான்மகளே மணிக்கதவந்தாள்திறவாய்
மாமீரவளையெழுப்பீரோ வுன்மகள்தான்
ஊமையோ வன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப்பெருந்துயில்மந்திரப்பட் டாளோ
மாமாயன்மாதவன்வைகுந்தனென்றென்று
நாமம்பலவும்நவின்றேலோரெம்பாவாய். (௯)

ப-ரை.—தூ - குற்றமற்ற, மணி - மாணிக்கங்களழுத்திச் சமைத்த, மாடத்து - மாளிகையில், சுற்றும் - நாற்புறத்திலும், விளக்கு-விளக்குகள், எரிய-எரியவும், தூபம் - அகில்முதலிய வாஸனைப்புகைகள், கமழ - எங்கும்பரிமளிக்கவும், துயில் - எப்போதும் உறங்கப்பண்ணும் மென்மைத்தன்மையுள்ள, அணைமேல் - அன்னத்தூவியாற்செய்த மெத்தையிலே, கண்வளரும் - கண்ணுறங்குகிற, மாமான்மகளே - அம்மான் பெண்ணே, மணிக்கதவம்-மாணிக்கக்கதவினுடைய, தாள் - தாழ்ப்பாளை, திறவாய் - திறக்கவேணுமென்று சொல்ல; எழுந்திராதேகிடந்த மகளைப்பார்த்து, நீபேசாதே கிடக்கிறதென் என்று தாயார்கேட்க;புறம்பில்நின்று அத்தைக்கேட்டவர்கள், மாமீர் - அம்மாமீர், அவளை—, எழுப்பீரோ-எழுப்பப்போகாதோ என்ன; பின்னையும் உணரக்காணாமையாலே, உன்மகள்தான் - உன்னுடைய மகளானவள், ஊமையோ - வாய்ப்புலனில்லாதவளோ; அன்றி - அல்லாமற்போனால், செவிடோ-செவிப்புலனில்லாதவளோ; அன்றிக்கே,அனந்தலோ-படுக்கையில்சாய்ந்ததிப்போதோ; எழுந்திராதபடி, ஏமம்பட்டாளோ-காவலிடப்பட்டாளோ; பெருந்துயில் - நெடும்போதுறங்கும்படி, மந்திரப்பட்டாளோ - மந்த்ரவாதம் பண்ணப்பட்டாளோ என்று தாயாரைக்கேட்க; என்மகள் உணரும்படி திருநாமங்களைச் சொல்லுங்கோளென்ன; மா - இப்படிப்பட்டதென்று அளவிட்டுச் சொல்லக்கூடாத, மாயன் - ஆச்சர்யகுண சேஷ்டிதங்களை யுடையவனே யென்றும், மாதவன்-பெரியபிராட்டியார்க்குவல்லபனானவனேயென்றும்,வைகுந்தன் - ஸ்ரீவைகுண்டநாதனே யென்றும், என்றென்று -இப்படியாக, நாமம்பலவும் - அவனுடைய ஆயிரம் திருநாமங்களையும், நவின்று - சொன்னோ மென்கிறார்கள்.

---

யும்,உள்ளுக்கிடக்கிறவள்நித்யஸித்தரைப்போலேயுமாய்,மைத்துனமைமுறையை யுடையாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(தூமணிமாடம்) நிர்த்தோஷங்களான ரத்நங்களாலே செய்த மாடம். இவர்கள்விரஹதாபந்தீர ஸமாஶ்ரயமாகஅநுஸந்திக்கிறார்கள். ஆழ்வான், "ஹிதாம்ஶத்துக்குஒருவைஷ்ணவனுடைய க்ர்ஹயாத்ரையை அநுஸந்திக்க வமையும்" என்றாப் போலே, இவர்களும் இவளுடைய மாளிகையில்அழகை யநுபவிக்கிறார்கள். "துவளில் மாமணிமாடம்" என்று - எடுத்துக் கழிக்கவேண்டா. அது, ஜீவாத்மாவினுடைய * அபஹதபாப்மத்வாதிகளைப் போலே;

வ்யா.—(தூமணிமாடத்து) "துவளில் மாமணிமாடம்" என்று - குற்றமெடுத்துக் கழிக்கவேண்டாத நன்மையையுடைய மணியாலே செய்த மாடம். ஸம்ஸாரஸம்பந்தமுண்டாய்க் கழிந்த முக்தர்க்கும் அஸ்ப்ர்ஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யர்க்கு முள்ள வாசி போந்திருக்கை. (சுற்றும்விளக்கெரிய) மாணிக்கத்தி னொளியாலே பகல் விளக்குப்பட்டிருக்கச் செய்தே மங்களார்த்தமாக விளக்கெரிகிறது. (சுற்றும் விளக்கெரிய) க்ர்ஷ்ணன் வந்தால் தன்கையைப் பிடித்து உலாவுமிடமடையப் படுக்கையும் விளக்கு மாக்கிவைத்தபடி. புறம்பு நிற்கிறவர்களுக்கு உள்ளுவிளக்கெரிந்தது தெரிகிறபடி யெங்ஙனே யென்னில்; மாணிக்கக்குப்பிபோலே, புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றாநிற்கும். (தூபங்கமழ) புகை

---

இது, பரமாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதிகளைப் போலே. அங்கு - ப்ரத்வம்ஸாபாவம்; இங்கு - ப்ராகபாவம். அபஹதபாப்மத்வாதிகள் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு முண்டாயிருக்கச் செய்தே, ஹேயஸம்பந்தார்ஹமாயிறே இவன் வடிவிருப்பது. ஹேய ப்ரதிபடமாகையாலே அநர்ஹமாயேயிருக்குமவன். இவ்வூரில்கழித்த ரத்நங்கள்கொண்டு போலேகாணும் திருத்துலே வில்லிமங்கலத்தில் மாளிகைகள் செய்தது. ராஜாக்கள், அந்தஃபுரத்தில் கழித்தவை கொண்டிறே தங்களுக்கு மாளிகைகள்செய்வது. "సతతన్తఃపుర ద్వారమ్" "ஸததந்தஃபுரத்வாரம்," "மாடமாளிகை சூழ் மதுரைப்பதி நாடி," உகந்தருளின நிலமெல்லாம் ஒருகுடியிருப்புண்டு இவனுக்கு. மாலாகாரரகம் தன்னதிறே. [ప్రసాదపరమౌ నాథౌ - ப்ரஸாதபரமௌ நாதௌ] உபயவிபூதியுக்தனுகையாலே ஐஶ்வர்யம் விஞ்சியிருக்கும், அத்தையும் மேலிடும்படியாயிருக்கும் தண்ணளி. ஆஶ்ரயமதுவாகையாலே கழிக்கவொண்ணுமல் கிடக்கிறது நாதத்வம். (சுற்றும் விளக்கெரிய) இதொரு ஸம்பத்தே!. ஒருகொடிவிளக்கிறே புறம்பேநின்று புகைகிறது. புறம்புநிற்கிற நம்முடைய ஹ்ர்தயங்களிருண்டுகிடக்க, உள்ளுவிளக்கெரிகிறது வெறுமனன்றிறே; க்ர்ஷ்ணன் ஸந்நிஹிதனுகவேணுமிறே. திருச்சித்திரகூட பரிஸரத்திலே, பிராட்டியைக் கையைப்பிடித்துக்கொண்டு பெருமாளுலாவினப்போலே, இவள் கையைப் பிடித்துக்கொண்டு க்ர்ஷ்ணனுலாவுமிடமிறே. அவ்வோபாதி, இடமெங்கும் படுக்கைகளும்விளக்குமாய்க்கிடக்கிறபடி. (எரிய) ப்ரகாஶாவஹமன்று, மங்களாவஹம். இவர்கள் புறம்பேநின்று, "மணிக்கதவந் தாள்திறவாய்" என்கிறவர்கள், உள்ளெரிகிற விளக்கறிந்தபடி யென்னென்னில்; மாணிக்கக்குப்பியிலே அகவாயிலுள்ளது நிழலிட்டுத் தோற்றுமாப்போலே, தூமணிமாட மாகையாலே உள்ளெரிகிற விளக்குத் தோற்றுமிறே. (தூபம்கமழ) பரிமளம் ஸஹித்திருந்தது வெறுமனன்றிறே. விரஹதாபமில்லாதார்க்கு பரிமளம் பொறு

காணவொண்ணுதே பரிமளம் வெள்ளமிட. "சீருற்றவகிற்புகை" இத்யாதியில் சொல்லுகிறபடியே எங்களுக்கு அஸஹ்யமான பரிமளம் உனக்கு ஸஹ்யமானபடி யெங்ஙனே யென்கை. (துயிலணைமேல் கண்வளரும்) க்ர்ஷ்ணவிரஹத்தையும் ஆற்றவற்ருன படுக்கையிலே உறங்குகிற. எங்களுக்கு * மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாயிருக்க, உனக்கு படுக்கை பொருந்திக் கண்ணுறங்குவதே. (மாமான்மகளே) ஸ்வாமிநியாயும் தோழியாயும் அநுபவித்ததொழிய, ப்ரக்ர்திஸம்பந்தத்தாலும் ஆண்டாளநுபவிக்கிருள். "மாமான்மகள்" என்று-இட்டீடு கொள்ளுகைக்கு விடவொண்ணுத உறவுசொல்லுகிருள். திருவாய்ப்பாடியிலே ஒருப்ராக்ர்தஸம்பந்தம் தனக்குஉஜ்ஜீவநமென்றிருக்கிருள். பகவத்ஸம்பந்திகளுக்கு எல்லாம் அடிக்கழஞ்சு பெற்

---

க்குமாகாதே. "சீருற்றவகில்புகை" என்னும்படியிறேயிவர்கள்தசை. (கமழ) கண்ணுக்குப் புகையின்றிக்கே பரிமளமேயா யிருக்கிறபடி. (கமழ-கண்வளரும்) பரிமளஞ் சிறிதுகுறையில் கண்ணுறங்கா தாகாதே. (துயிலணைமேல் கண்வளரும்) நம்முடைய நெருப்புச் சிலர்க்குப் படுக்கையாவதே!; "மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளி." இருவர்க்குப்படுத்தபடுக்கையிலே ஒருத்திக்குப் பொருந்தும்போது அவனுமங்கேயுண்டாகவேணுமிறே. (துயிலணை) படுக்கைதான் விரஹார்த்தனையு முறக்கவற்ருயிருக்கை. "நஞ்சரவிற்றுயிலமர்ந்த" என்னுமாப்போலே. (கண்வளரும்) இளையபெருமாளைப்போலே யுறங்காமைக்கு நாங்களும், உறங்குகைக்கு நீயுமாய் விட்டதிறே. அபிமதலாபம் அவனுல் செய்யலாகில் இவர்கள் பதறுகிற தென்னென்றிருந்தாள் அவள்; உபேயமவனேயாகில் இவள் கிடந்துறங்குகிறதென் என்றிருந்தார்கள் இவர்கள். (கண்வளரும்) உறங்குவார்க்கு பாதஸம்வாஹிநிகள் வேண்டாவோ, உள்ளுப்புக்காலும் இதாகாதே செய்யப்பார்க்கிறது. ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்க ளன்றுநிருபகம், ஶேஷத்வம். (கண்வளரும்) பகவத்விஷயத்தில் அவகாஹித்தால் சௌரவ்யதை தோற்றச்சொல்லவேணுமிறே. பட்டர்க்குச்சிலர், "தொண்டனூர்நம்பி திருவடிச்சார்ந்தார்" என்று விண்ணப்பஞ்செய்ய; அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்து போந்தபடிக்கு "திருநாட்டுக்கு நடந்தார் என்று சொல்லவேண்டாவோ" என்றருளிச்செய்தார். நம்பியேறுதிருவுடையார்தாஸ ரிடையாட்டமாகவும் நஞ்ஜீய ரிப்படி யருளிச்செய்தார். (மாமான்மகளே) ஸ்வாமிநியாயும்தோழியாயுமநுபவித்ததொழியப்ரக்ர்திஸம்பந்தத்தாலும் அநுபவிக்கிருர்கள். "மாமான்மகளே" என்று-இட்டீடுகொள்கைக்கு விடவொண்ணுத முறைகட்டிக்கொண்டு சொல்லுகிருர்கள். திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ரக்ர்தி ஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவநஹேதுவாக ஆண்டாள் ஆசைப்பட்டபடி. பகவத்ஸம்பந்திகளுக்கு

றிருக்கிறபடி. (மணிக்கதவந் தாள்திறவாய்) நீங்கள்திறந்துகொண்டு புகுருங்கோள் என்ன; மாணிக்கங்களினொளியாலே தாள்தெரிகிற தில்லை, நீயே திறவாயென்கிறார்கள்.

"அவர்களழையாநிற்க, நீபேசாதேகிடக்கிறதென்?" என்று தாயார் கேட்க; புறம்புநின்றவர்கள் அது கேட்டவாறே (மாமீ ரவளை யெழுப்பீரோ) என்கிறார்கள். (மாமீர்) அவளுடைய திருத் தாயாரென்று அவளுறவாலேசொல்லுகிறார்கள். பின்னையுமுணரக்கா ணாமையாலே சிவிட்கென்று (உன்மகள்தான் ஊமையோ) என்கி றார்கள்; - வ்யவஹாரயோக்யையன்றோ வென்கிறார்கள். (அன்றிச் செவிடோ) ஊமைக்கும் கேட்டுவந்து திறக்கலாம், அதுக்குமேலே, செவியில் துளையில்லையோ; எங்கள் வார்த்தைகேளாதபடி அந்ய

---

எல்லாம் அடிக்கழஞ்சு பெற்றிருக்கிறபடி. அதுதானும், "[illegible]" "ஹேக்ர்ஷ்ணஹேயாதவஹேஸகா" என்று பொறுப்பித்துக்கொள்வதொருஸம்பந்தமாகவேணும். நீங்கள் ஆர்த்தைகளாய்ப்பதறிவருவுதிகோளென்னு மிடமறிந்து யந்த்ரத்தாலே திறக்கலாம்படிபண்ணிக்கொண்டுகிடந்தேன், திறந்துகொண்டுபுகுருங்கோளென்ன; (மணிக்கதவம் தாள்திறவாய்) * மணிமாடமாளிகையாகையாலும் மணிக்கதவாகையாலும் சுவருக்குங் கதவுக்கும் வாசிதெரிகிறதில்லை, தேசிகரோ திறக்கவேணும், நீயே திறவா யென்கிறார்கள். இவர்கள்தான், திறந்துநின்றாலும் சிலர் புகுரவிடவல்லது புகுரார்கள்காணும். (மணிக்கதவம் தாள்திறவாய்) துர்யோதநன் நீருக்கும் ஸ்படிகமண்டபத்துக்கும் வாசியறியாதே தடுமாற, த்ரௌபதி சிரித்தாப்போலே, மைத்துனமை கொண்டாடிச் சிரிக்கவொண்ணாது, புறம்புள்ளார்க்கு உள்ளுள்ளவை ப்ரகாசிக்கிறாப்போலே உள்ளுள்ளார்க்குப் புறம்புள்ளாரார்த்தி தெரியாமை யில்லையிறே.

இவர்கள் ஆர்த்தைகளாய் வாசலிலே நின்று துவள, இவள் வாய் பேசாதேகிடந்துறங்குவதே! என்று ஹ்ர்தயத்தி லிரக்கம் முகத்திலே தோற்றும்படியாய் நீ ஸ்வப்ரயோஜநபரையாய்க் கிடப்பதே! என்று மகளைச்சொல்ல உபக்ரமித்தமை தோற்ற விருந்தாள் தாயார்; (மாமீர்) என்கிறார்கள். அவள் திருத்தாயாரென்று ஸம்பந்தி ஸம்பந்திகளுமிவர்களுக்குஉத்தேஶ்யராயிருக்கிறபடி. உள்ளுக்கிடக்கிறவளுகப்பு தாயாரளவுஞ்சென்றபடி. "அடிகளடியேநினையு மடியவர்கள்தம் மடியான்" என்றும், "தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்" என்றும்சொன்னபடியே, "அன்னையு மத்தனும்" என்றிறேஇவளிருப்பது. (அவளை யெழுப்பீரோ) எங்களார்த்திக்கு உணராதவள் உம்முடைய இரப்புக்கோ வுணரப்புகுகிறது. இவ்வளவிலு முணரக்காணாமையாலே, சிவிட்கிட்டு (உன்மகள்) என்கிறார்கள். பிராட்டி ப்ரணயகோபம் சக்ரவர்த்தியளவும் மேலிட்டு "[illegible]" "பிது:"

பனையோ. (அனந்தலோ) நெடும்போது க்ர்ஷ்ணாநுபவம்பண்ணி, படுக்கையிற் சாய்ந்தது இப்போதோ. (ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) "ஏமம்" என்பது-காவல். எழுந்திராமைக்குக்காவலிட்டாருண்டோ; நெடும்போது உறங்கும்படிமந்த்ரவாதம் பண்ணினாருண்டோ. "மையலேற்றிமயக்க உன்முகம் மாயமந்திரந்தான் கொலோ" என்று - (க) அம்மான்பொடி தூவினாருண்டோ வென்கை.

"அவளுணரலாம்படி திருநாமங்களைச்சொல்லுங்கோள்" என்று திருத்தாயார்சொல்ல; நாங்கள்சொன்ன திருநாமங்கள் அநேகமன்றோ வென்றார்கள்; அவைதானெவையென்ன, சொல்லுகிறார்கள் (மாமாயன்) ஆஸ்சர்ய குணசேஷ்டிதங்களாலே அபலைகளானபெண்களை எழுதிக்கொண்டவன். (மாதவன்) அதுக்கடியான ஸ்ரீயப்பதி. அந்த ஸௌலப்யத்துக்கு குருகுலவாஸம் பண்ணின விடம். (வைகுந்தன்) ஸ்ரீயப்பதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான

---

என்றாப்போலே, அவள்பக்கல் சீற்றமிவ்வளவும்வர, அசலிட்டு "உன்மகள்" என்கிறார்கள். (ஊமையோ) வாக்வ்யவஹார யோக்யதையில்லையோ. ஆர்த்தனை, ஐயோ! என்னவொண்ணாதபடியோ செல்லுகிறது. (அன்றிச்செவிடோ) ஊமைக்கும் கேட்டுவந்து திறக்கலாம், அதுக்குமேலே செவியில் துளையில்லையோ. ஆர்த்தைகளான எங்களுடைய சொல் கேளாதபடி அந்யபனையோ. அதுக்கு மங்கேயோ விஷயம். (அனந்தலோ) க்ர்ஷ்ணனுக்குநெடும்போது ஆடல்கொடுத்துப்படுக்கையில் சாய்ந்தது இப்போதோ. நெஞ்சுக்கும் விஷயமங்கேயோ. (ஏமப்பெருந்துயில்) எங்களை யுறங்காதபடி பண்ணினாப்போலே, இவளையும் உணராதபடி காவலிட்டாருண்டோ. நாங்கள் புக்கு உணர்த்தவொட்டாத வேளையிலே நெடும்போ துறங்கும்படி (உ) மந்த்ரபத்தையானாளோ. "உன்முகம் மாயமந்திரந்தான் கொலோ" என்று-அவனுடைய (க) அம்மான்பொடி ப்ரஸித்தமிறே.

"நீங்கள்இவள் ப்ரகர்தியறிந்தால்இங்ஙனல்லகாணுங்கோளுணர்த்துவது, தென்றலும் சிறுதுளியும்போலே இவளுக்குத்திருநாமங்கள் சொல்லிகோள்" என்று திருத்தாயார்சொல்ல; "பல் பன்னிரண்டுங் காட்டினேனுங்காண்" என்கிறார்கள்; நீங்கள்சொன்ன திருநாமங்கள் எவையென்ன (மாமாயன்) ஆஸ்சர்யகுண சேஷ்டிதங்களாலே அபலைகளான பெண்களை யெழுதிக்கொண்டு, அவர்களுக்கு இஷ்டவிநியோகார்ஹமாம்படி பவ்யனாயிருக்குமவன். (மாதவன்) அந்த ஸௌலப்யத்துக்கு குருகுலவாஸம் பண்ணினவிடம். (வைகுந்தன்) பெண்களையே யன்றிக்கே ஆண்களையு மடிமைகொண்டு ஒருநாட்டுக்

---

(க) அம்மான்பொடி - பிள்ளைகள் வசப்பட்டு. "அம்மான், அம்மான்" என்று சொல்லிக்கொண்டு பின்செல்லும்படி தூவுவதொருபொடி.

(உ) மந்த்ரபத்தை - மந்த்ரத்தாலே கட்டப்பட்டவள்.

தேஶவிஶேஷத்தை யுடையவன். அப்பெரிய மேன்மையையுடைய ஸ்ரீயஃபதியானவன்கிடீர் பெண்களுக்கெளியனானென்கை. மேன்மைக்கடியான திருநாமங்களும், நீர்மைக்கடியான திருநாமங்களும், இரண்டுக்கும் நிதாநமான ஸ்ரீயஃபதித்வத்துக்கு வாசகமான திருநாமங்களுமாக ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமத்துக்குப் போரும் திருநாமங்கள் சொல்லிற்றென்கிறார்கள். நாமம்பலவும்நவின்று - மாமீரவளை யெழுப்பீரோ என்று அந்வயமாகவுமாம். ... ... ... கூ

---

காகக் கையாளா யிருக்குமவன். ஸ்ரீயஃபதித்வத்தால் வந்த மேன்மைக்குத் தகுதியான தேஶவிஶேஷத்தை யுடையவன். ஸ்ரீவைகுண்டத்தை கலவிருக்கையாக வுடையனாய், பெரியபிராட்டியார்க்கு வல்லபனாயிருந்துவைத்து, நமக்குக்கையாளான ஆஶ்சர்யபதமனென்னவுமாம். (என்றென்று) மேன்மைக்கும், நீர்மைக்கும், இரண்டுக்கும் நிதாநமான ஸ்ரீயஃபதித்வத்துக்கும் வாசகங்களான திருநாமங்களை யொருக்காலிருக்காலோ சொல்லிற்று. (நாமம்பலவும் நவின்று) ஸ்ரீஸஹஸ்ரநாம முட்படச் சொன்னோம். நாமம்பலவும் நவின்று-மாமீரவளை யெழுப்பீரோ என்றுமாம் ... ... ... ... ... கூ

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—ஒன்பதாம்பாட்டு. (தூமணியித்யாதி) உபாயாத்யவஸாய நிஷ்டரான அதிகாரியை எழுப்புகிறார்கள்.

வ்யா.-(தூமணிமாடத்து)அப்ராக்ர்தமாய்பஞ்சோபநிஷண்மயமான திவ்யமங்களவிக்ரஹத்திலே. (சுற்றும்விளக்கெரிய)ஸர்வதோமுகமாகஜ்ஞாநதீபம் ப்ரகாஶிக்க.(தூபம்கமழ)ஜ்ஞாநம்பரிமளிக்க.ஜ்ஞாநம்பரிமளிக்கையாவது-அநுஷ்டாந ஶேஷமாயிருக்கை.(துயிலணைமேல்கண் வளரும்)நித்ராப்ரதமான ஶயநத்திலேகண்வளருகிற.அதாவது-ஸ்வப்ரயத்ந ஸாமாந்ய நிவ்ர்த்தி பூர்வகமான பகவதேகோபாயாத்யவஸாயத்திலேநிஷ்டனாயிருக்கை.(மாமான்மகளே) "மாமான்" என்றும் "அம்மான்"என்றும் இரண்டும்பர்யாயமாகையாலேஸ்வாமியானஎம்பெருமானாலேபுத்ரத்வேநாபிமதராய்அநந்யார்ஹரான பாகவதரே.(மணிக்கதவம்)மணிமாடத்தினுடையமணிக்கதவையும்மணிதாள்திறவாய். அதாவது-த்வதநுபவவிரோதியானதேஹாத்மாக்களிரண்டிலுமுண்டான மமகாரத்தைத்தவிர்ப்பியாயென்றபடி. அன்றிக்கே,த்வதநுபவவிரோதியானபகவத்ஸௌந்தர்யத்திலும் பகவத்பக்தியிலும் மமகாரத்தைத் தவிர்ப்பியாயென்கிறார்கள். இவர்களிப்படி சொன்னவிடத்திலு மிவ்வதிகாரி பேசாதே கிடக்கையாலே இவ்வதிகாரிக்கு ஜநகையாயிருக்கிற அநந்யோபாயத்வ ஸ்வரூபஜ்ஞாநமாகிற திருத்தாயார், அவர்களிப்படியழைக்க நீபேசாதேகிடப்பதேயென்ன (மாமீரவளை யெழுப்பீரோ) என்கிறார்கள். அதாவது - ஸ்வாமிநி

யானவளே, உனக்கு ஸ்வம்மானவவளை யெழுப்பீரோ வென்றபடி. தன்னிடத்திலநந்யோபாயத்வஜ்ஞாநம்பிறந்தபின்பிறேதகோபா யாத்யவஸாயம்ஜநிப்பது. இப்படிசொன்னவிடத்திலும் எழுந்திராத வின்னுப்பாலே“உன்மகள்தானூமையோ”என்கிறார்கள். அதாவது- மறுமாற்றஞ் சொல்லவல்ல ளல்லளோவென்றபடி. இவளைப்பேச வொட்டாதேவாயைமூடினருண்டோவென்றுபாவார்த்தம். (அன்றி ச்செவிடோ) ஊமையானமாத்ரமன்றிக்கேநம்வார்த்தைகேளாதபடி செவிடோ. நம்பேச்சுக்கேளாதபடி அங்கேஆரவாரமுண்டோவென் றுபாவார்த்தம். (அனந்தலோ) சோம்பலோஎன்றபடி. நெடும்போது நாயகனோடுகூடியிருந்து படுக்கையிலேசாய்ந்ததிப்போதோவென்று பாவார்த்தம். தனித்தனியே வாகாதிஇந்த்ரியங்கள் பகவத்விஷயத் திலே ப்ரவணங்களாகையாலே ஒருகார்யத்திலும்ஶக்தையல்லளென் றுமாம். (ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) காவலிடப் பட் டாளோ; மஹாநித்ரையுண்டாம்படி மந்த்ரவாதம் பண்ணப்பட்டா ளோ. ஸ்வப்ரவ்ர்த்திஸாமாந்யமும் உபாயவிரோதியாகையாலேஇதில் அந்வயியாதபடிதடுத்துவைத்தவர்களுண்டோ. அதாவது-நமஸ்ஸு தடுத்ததோவென்றபடி. உபாயவைலக்ஷண்யம் ப்ரவ்ர்த்யந்தரத்தில் அந்வயியாதபடி மோஹிப்பித்ததோவென்றபடி.

இப்படி யிவர்கள் இன்னாதாக, திருத்தாயார், திருநாமத்தைச் சொல்லுங்கோள் இவளெழுந்திருக்கைக்கு என்ன (மாமாயன்மாத வன் வைகுந்தனென்றென்று நாமம்பலவும்நவின்று) (மாமாயன்) அத்யந்தம் ஸுலபன். (மாதவன்) இதுக்கு குருகுலவாஸம்பண்ணி னவிடம்.(வைகுந்தன்)இஸ்ஸௌலப்யம்குணமாகைக்கூடானபரத் வமுடையவன். (என்றென்றுநாமம்பலவும்நவின்றேும், மாமீரவளை யெழுப்பீரோ) ஸ்வார்த்தப்ரவ்ர்த்திஸாமாந்யமுமுபாயவிரோதி, பரா ர்த்தப்ரவர்த்தி ஸாமாந்யமு முபாயபலமாயும் உபாயாநுகூலமாயு மிருக்குமென்றறிவித்து. (அவளை) உபாயாத்யவஸாயநிஷ்டனை(எழு ப்பீரோ) என்று அந்வயம் ... ... ... ... ... ... ... ௯

---

அ.—பத்தாம்பாட்டு. பெண்களெல்லாரும், “க்ர்ஷ்ணன்” என் றால் படும்பாட்டை அவன்தான் பட்டு “தண்ணீர், தண்ணீர்” என் னும்படி வீறுடையாளொருத்தியை எழுப்புகிறார்கள். “[illegible]

---

அ.—பத்தாம்பாட்டு.ஒரு(க)கிடையிலேபலபிள்ளைகள்ஓதாநின் றால்ஒருவனுக்கு(உ)ஓத்துப்போய்ஸமர்த்தனுமானால்அவனேஅவர் களுக்கெல்லாம் நிர்வாஹகனுமாப்போலே, இவ்வூரில் பெண்பிள்ளைக ளெல்லாரிலும் க்ர்ஷ்ணஸம்ஶ்லேஷத்தில் விதக்தையாய், எல்லாப்

---

(க) கிடை - வேதமோதுமிடம். (உ) ஓத்துப்போய்-வேதாத்யயநம்பண்ணி.

𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍" "ஆநந்தம்ப்ர்ஹ்மணோவித்வாந்" என்னாதே, "𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿" "ஏஷஹ்யேவாநந்தயாதி" என்றிருப்பாளொருத்தி யென்றுமாம்.

மூ.—நோற்றுச்சுவர்க்கம்புகுகின்றவம்மனாய்
மாற்றமுந்தாராரோவாசற்றிறவாதார்
நாற்றத்துழாய்முடிநாராயணன்நம்மால்
போற்றப்பறைதரும்புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்தகும்பகரணனும்
தோற்றுமுனக்கேபெருந்துயிறான்றந்தானோ
ஆற்றவனந்தலுடையாயருங்கலமே
தேற்றமாய்வந்துதிறவேலோரெம்பாவாய். (க0)

ப-ரை.—க்ர்ஷ்ணனே பதறிக்கொண்டுவந்து விழத்தக்க வீறுடையாளொருத்தியை, நோற்று - அழகிதாகநோற்று, சுவர்க்கம்புகுகின்ற - ஸுகாநுபவம்பண்ணுகிற, அம்மனாய் - அம்மேயென்று எழுப்பினவளவிலும் பேசாதே கிடக்க; வாசல்திறவாதார்-வாசற்கதவைத்திறவாமற்போனால்,எளிவரவுபட்டவெங்களைப்பார்த்து, மாற்றமுந்தாராரோ - ஒருபேச்சாகிலும் பேசலாகாதோவென்ன; நீங்கள் பழியிடுகைக்கு அவன் இங்குண்டோ வென்ன; நீ யிங்கில்லையென்னிலும், நாற்றம் - பரிமளம் வீசாநின்றுள்ள, துழாய் - திருத்துழாய் மாலையாலே அலங்க்ர்தமான, முடி - திருவபிஷேகத்தை யுடையனான, நாராயணன் - ஸர்வஸ்மாத்பரனான நாராயணனாய், நம்மால் - ஆச்ரிதரான நம்மாலே, போற்ற - மங்களாசாஸநம்பண்ணப்பட, நம்முடையவெறுமையையே பச்சையாகக்கொண்டு, பறைதரும் - புருஷார்த்தத்தைத் தருமவனாய், புண்ணியனால் - நிலைநின்றதர்மமானவனாலே, பண்டொருநாள் - ராவணன்பிராட்டியைப்பிரித்தமுற்காலத்திலே,கூற்றத்தின் - ம்ர்த்யுவினுடைய,வாய்-வாயிலே, வீழ்ந்த-விழுந்த, கும்பகரணனும்—, உனக்குத்தோற்று - உனக்குத்தோற்றுப் போய், பெருந்துயில் - பேருறக்கத்தை, தந்தானோ - உனக்குத்தந்து போனானென்னும்படியான, ஆற்றவனந்தலுடையாய் - பெருந்தூக்கத்தை யுடையவளே, அருங்கலமே - எங்களுக்கு சிரோபூஷணமா யிருப்பவளே, தேற்றமாய் வந்து - தடுமாறாதே தெளிந்துவந்து, திற - திறக்கவேணுமென்கிறார்கள்.

---

பெண்களையும் க்ர்ஷ்ணன் படுத்துமத்தை க்ர்ஷ்ணன்றன்னைப் படுத்துவா ளொருத்தியாய், அவன்றான் "தண்ணீர்,தண்ணீர்" என்னும்படி வீறுடையாளொருத்தியாய், இவர்கள் தாழ்த்ததுக்கு அவனையிட்டுப் பொறுப்பிக்கும்படி அவன்பக்கல் போர முகமுடையாளுமாய், க்ர்ஷ்ணன் திருமாளிகைக்கு அசல் திருமாளிகையுமாய், நடுவு (க)இடைச்சுவர்தள்ளிப்பொகட்டுஒருபோகியாக (க)தண்ணீர்த்துரும்பற்றுஒருபடுக்கையிலேஅவனுந்தானுமாக எப்போது மநுபவிப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள். "𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍" "ஆநந்தம் ப்ரஹ்மணோவித்வாந்" என்னாதே, "𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿" "ஏஷஹ்யேவாநந்தயாதி" என்று அவன் ஆநந்திப்பிக்க விருப்பாளொருத்தி. *

---

(க) இடைச்சுவர் - தண்ணீர்த்துரும்பு-ப்ரதிபந்தகம்.

வ்யா.—(நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்) க்ர்ஷ்ணன் அசல் திருமாளிகையாய் நடுவிட்ட வாசலாகையாலே ஒருபோகியாக அநுபவிக்கிறாளென்றுமாம். (நோற்றுச்சுவர்க்கம்புகுகின்ற அம்மனாய்)வைகினபின்பும்எழுந்திராமையாலேஅம்மே! அழகிதாகநோற்றுஸுகம்பெறக்கோலினாய்! என்று † ஸ்தோபிக்கிறார்களென்றுமாம். நோற்கவேண்டாதபடி நோன்பின்பலம் கைபுகுந்தவளிறே யிவள் என்றுமாம்.(நோற்று)ஸித்தஸாதநையாகையாலேஉபாயாம்ஶத்தில் நிர்ப்பரையாயிருந்தாள். அவனுடைய ரக்ஷகத்வத்தையுணர்ந்தால் தனக்கு யத்நம்பண்ண ப்ராப்தியில்லை; தன் ஶேஷத்வத்தையுணர்ந்தாலும் ப்ராப்தியில்லையிறே. "విదుఃకృష్ణం బ్రాహ్మణాస్తత్త్వతో యే తేషాం రాజన్ సర్వయజ్ఞాస్సమాప్తాః" "விதுஃக்ர்ஷ்ணம் ப்ராஹ்மணாஸ்தத்த்வதோயே தேஷாம்ராஜந்ஸர்வயஜ்ஞாஸ்ஸமாப்தாஃ" என்றிறேயிருப்பது. எழுப்புகிறவர்களுக்கும் இதுவன்றோ ஸ்வரூபமென்னில்; ஸித்தோபாய நிஷ்டர்க்கு விளம்ப ஹேதுவில்லாமையாலே ப்ராப்யத்தில்

---

வ்யா.—(நோற்று)க்ர்ஷ்ணனைப்பிரிந்தபோதேபிடித்துக் குளிப்பது நோற்பதாகாநிற்க, இவள்படிபத்தொன்பதாம்பாஷையாயிருப்பாளொருத்தி. ஒக்கநோற்கக்கடவோம், ஒக்கக்குளிக்கக்கடவோம், க்ர்ஷ்ணனோடொக்கவநுபவிக்கக்கடவோமென்றுசொல்லிநோன்பின் பலம் கைபுகுந்து, க்ர்ஷ்ணாநுபவம்பண்ணிக்கரச்சலற்றுக்கிடந்து உறங்கவமையுமோ. ஸித்தஸாதநையாயிருப்பாளொருத்தி. "సర్వయజ్ఞాస్సమాప్తాః" "యో మామేవమసమ్మూఢో జానాతి పురుషోత్తమమ్" "స సర్వవిద్భజతి మాం సర్వభావేన భారత" "కృతకృత్యశ్చ భారత" "కృతకృత్యాః ప్రతీక్షన్తే" "ஸர்வயஜ்ஞாஸ்ஸமாப்தாஃ" "யோமாமேவமஸம்மூடோ ஜாநாதிபுருஷோத்தமம்," "ஸஸர்வவித்பஜதிமாம் ஸர்வபாவேநபாரத" "க்ர்தக்ர்த்யாஶ்சபாரத" "க்ர்தக்ர்த்யாஃப்ரதீக்ஷந்தே" "செய்தவேள்வியர்" என்றும் ப்ரமாணங்கள்சொல்லுகிறபடியே ஸித்தஸாதநை யாகையாலே உபாயாம்ஶத்தில் நிர்ப்பரையாயிருந்தாள். ஸித்தஸாதநரா யிருப்பார்க்குக் கர்த்தவ்யமொன்று மின்றிக்கே யொழிகிறபடி யெங்ஙனே யென்னில்; அவனுடைய ரக்ஷகத்வத்தை யுணர்ந்தால் தனக்கு யத்நம்பண்ண ப்ராப்தியில்லை; தன்ஶேஷத்வத்தை யுணர்ந்தாலும் ப்ராப்தியில்லை; விரோதிப்ராபல்யத்தை யுணர்ந்தாலும் ஒன்றுஞ்செய்ய ப்ராப்தியில்லை; இதரோபாயங்களுக்கும் அவன்ப்ரஸாதம் வேண்டியிருக்கையாலே யொன்றுஞ் செய்ய ப்ராப்தியில்லை. ஆனபின்பு "நாராயணனே" என்று–அவனுடைய உபாயபாவத்தை அநுஸந்தித்து வைத்து, விடிவோறே எழுந்திருந்து குளிக்கக்கடவதோ! என்றிருக்கிறாள். புறம்புகின்று எழுப்புகிறவர்களுக்கும் இப்படி யிருக்கையன்றோ ஸ்வரூபமென்னில்; அவர்களுக்கு நினைவு உபாயமென்

---

† ஸ்தோபிக்கிறார்கள்-அவள்வார்த்தையை நிரர்த்தகமாக்குகிறார்கள்.

த்வரையாலேபதறுகிறார்கள்; ஸித்தோபாயநிஷ்டர்க்கும்கர்மஜ்ஞாந பக்திகளுண்டு; இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாயிருக்கும். ஜ்ஞாநம் ஸ்வரூபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்யருசியிலே அந்விதம். (சுவர்க்கம்புகுகின்ற) ஸுகத்தைஇடைவிடாதே அநுபவிக்கிற. இவர்களுக்கு க்ர்ஷ்ணாநுபவமிறே ஸுகம். “యస్త్వయాసహసస్వర్గో నిరయోయస్త్వయావినా” “யஸ்த்வயாஸஹஸஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயாவிநா” என்று, ஸ்வர்க்கஶப்தம் - ஸுகவாசி. (அம்மனாய்) ரக்ஷகையானவளே. நீ ரக்ஷகையாக, நாங்களுனக்குக் குழைச்சரக்கானபடி யழகிதாயிருந்தது. அவள்பேசாதேகிடப்பானென்னென்னில்; திருவடி வரத்தில் பிராட்டி, “ప్రహర్షేణావరుద్ధాసా వ్యాజహారనకిఞ్చన” “ப்ரஹர்ஷேணாவருத்தாஸா வ்யாஜஹாரநகிஞ்சந” என்றிருந்தாப்போலே, “సంశ్రవేమధురంవాక్యమ్” “ஸம்ஶ்ரவே மதுரம்

கிற ஶப்தத்தை விஶ்வஸித்திருக்கவோ, உபேயத்துக்காக வன்றோ உபாயஸ்வீகாரம், ஸித்தோபாய நிஷ்டர்க்கும் ப்ராப்யத்தில் த்வரையில்லையாகில் சேதந னன்றிக்கே யொழியு மத்தனை யென்றுவிளம்பஹேறது இல்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையாலே பதறுகிறார்கள். ஸித்தோபாய நிஷ்டர்க்கும் கர்ம ஜ்ஞாநபக்திகளுண்டு – இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாயிருக்கும். ஜ்ஞாநம் ஸ்வருபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்யருசியிலே புகும். ஆனபின்பு ப்ராப்யத்தில் த்வரையில்லையாகில் அசித்தோடொக்குமத்தனை யென்கிறார்கள். (சுவர்க்கம்புகுகின்ற) ஸுகத்தை விடாதே யநுபவிக்கிற. “ ஸ்வர்க்கம் ” என்று-ஸுகத்தைச் சொல்லுகிறது. ஸாக்ஷாத்ஸுகஶப்தவாச்யனாகையாலே, க்ர்ஷ்ணனை “சுவர்க்கம்” என்கிறது. “ యస్త్వయాసహసస్వర్గో నిరయోయస్త్వయావినా ” “யஸ்த்வயாஸஹஸஸ்வர்க்கோநிரயோயஸ்த்வயாவிநா” என்னக்கடவதிறே. • ஆநந்தரூபனாய் ஆநந்தகுணகனாய் .ஆநந்தாவஹனாயிருக்கிற க்ர்ஷ்ணனுடைய அநுபவமிறே ஸாக்ஷாத்ஸுகமாகிறது. (புகுகின்ற) அநுபவத்தில் விச்சேதமில்லாமை சொல்லுகிறது. உபாஸநவேளையில் ஸ்மர்த்தவ்யவிஷயத்தினுடைய அநுஸந்தாநத்தாலே வருவதொரு ஸாரஸ்யமுண்டு; அதுதான் ஈாதாசித்கமாகையாலே ஹேயஸம்பந்தமற்று அவ்வருகேபோனால் அவிச்சிந்நமாக வநுபவிப்பதொரு அநுபவமுண்டு; அது இங்கே கைபுகுந்திருக்கை.(அம்மனாய்) அழகிதாகவித்திரளுக்கு ரக்ஷகையானாய். நீ ரக்ஷகையாக நாங்கள் குழைச்சரக்கானபடி யென்! எங்களை க்ர்ஷ்ணனோடே அநுபவிப்பித்து, அவ்வநுபவம் உன்முலையோடும் தோளோடு மணைந்தாப்போலே யிருக்கவேண்டாவோ. “సంశ్రవేమధురంవాక్యమ్” “ஸம்ஶ்ரவே மதுரம்வாக்யம்” என்கிறபடியே இவர்கள் பேச்சிலினிமையாலும், “ప్రహర్షేణావరుద్ధాసా” “ப்ரஹர்ஷேணாவருத்தாஸா” என்று-இவர்களைக்

வாக்யம்" என்னும்படியே யிவர்கள் பேச்சே யமையுமென்று கிடக்கிறாள். தங்களடியேனாயிருக்கிற வென்னை "அம்மனாய் என்பதே!" என்று கிடக்கிறாளாகவுமாம். (மாற்றமும் தாராரோ வாசல்திறவாதார்) இவள் வாய்பேசாதேகிடக்கிற விதுபொறுக்க மாட்டாமையாலே, "மாற்றமுந் தாராரோ வாசல்திறவாதார்" என்கிறார்கள். வாசல் செம்மினால் வாயும் செம்மவேணுமோ. ஐஶ்வர்யம்மிக்கால் பந்துக்களை ஏன் என்னலாகாதோ. "𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍" "போதயந்தபரஸ்பரம்" என்கிற ந்யாயமும் தவிர்ந்ததோ. உடம்பை க்ர்ஷ்ணனுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பேச்சாகிலும் தரலாகாதோ. கண்ணுஞ் செவியு மொக்கப் பட்டினிவிடவேணுமோ. "𑌮𑌧𑍁𑌰𑌾𑌮𑌧𑍁𑌰𑌾𑌲𑌾𑌪𑌾" "மதுராமதுராலாபா" என்றிறே யிவள் பேச்சிருப்பது.

நீங்கள்பழியிடுகிறதென், அவன் இங்குண்டோ என்ன (நாற்றத்துழாய்முடி) (க) கோயிற்சாந்தை யுன்னாலொளிக்கப்போமோஎன்ன;

---

கண்ட ஹர்ஷத்தாலே, விக்கி வார்த்தைசொல்லமாட்டாமை யாலும், தங்களடியேனான வென்னை, "தாய்" என்று பழியிடுவதே! என்று ஸ்வரூபத்தை யநுஸந்திக்கையாலும், இவர்கள் க்ர்ஷ்ணாநுபவம் பண்ணுகிறோமென்று பழியிடாநின்றார்கள். இவ்வளவிலே யொன்று சொல்லுவோமாகில்இவர்கள்சொன்னதுக்குஇசைந்து, மதியாமல் உத்தரஞ்சொன்னோமாவுதோமென்று பேசாதேகிடந்தாள்; இவள் நினைவறியாதே தாங்கள் புறம்பேநின்று துவளுகிற துவட்சி பொறுக்கமாட்டாமையாலே, (மாற்றமும்தாராரோ வாசல்திறவாதார்) என்கிறார்கள். வாசலைச்செம்மினால் வாயையுஞ் செம்ம வேணுமோ. கண்ணைப்பட்டினிகொண்டவோபாதி செவியையும்பட்டினி கொள்ளவேணுமோ. ஐஶ்வர்யம் விஞ்சினால் பந்துக்கள் ஆர்த்தரானால் ஏனென்னலாகாதோ. படுகுலையடித்தால், தண்ணீர்வார்த்தால் ஆகாதோ. போகத்தைத்தடுத்தால் எங்கள் ஸத்தையையும் அழிக்கவேணுமோ. (மாற்றமும் தாராரோ) உன்னுடம்பை க்ர்ஷ்ணனுக்குக் கொடுத்தால், எங்களுக்குப் பேச்சாகிலும் தந்தாலாகாதோ. க்ர்ஷ்ணனை அருக்கினால் உன்னையு மருக்கவேணுமோ. உன் சரக்குத்தரப் பார்த்திலையாகில் எங்கள் சரக்குத்தந்தால் ஆகாதோ. உன்னுடைய க்ர்ஷ்ணனைத் தாராவிட்டால் எங்களுடைய உன்னைத் தந்தாலாகாதோ. (மாற்றமும்) "𑌮𑌧𑍁𑌰𑌾𑌮𑌧𑍁𑌰𑌾𑌲𑌾𑌪𑌾" "மதுராமதுராலாபா" என்று இவள் பேச்சுக்கு அவனும் தோற்றிறே யிருப்பது.

இப்படி யிவர்கள் பழியிடாநின்றால் ஒரு உத்தரஞ்சொல்லியாகிலும் பிழைப்போ மென்று நீங்கள் சொல்லுகிற பழிக்கு அவனிங்குண்டோவென்ன; (நாற்றத்துழாய்முடி) நீயும் மறைத்து உன்

---

(க) கோயிற்சாந்து-ஒப்பற்றகலவைச்சாந்து.

இப்போது உண்டாகவேண்டா, அவன் ஒருக்காலணைத்து விட்டால்அவை அஞ்சாறுகுளிக்குப்பரிமளம்நிற்குமே, கட்டுங்காவலுமாயிருக்கிற வாசலிலே புகுரப்போமோ அவனுக்கென்ன ; ( நாராயணன்) அவனுக்கு எங்களைப்போலே கதவு திறக்கப் பார்த்திருக்கவேணுமோ,வ்யாப்திக்கு ப்ரயோஜநம்,வேண்டினவிடத்தே ஸ்புரிக்கவல்லனாகையன்றே.உகவாதாரையும்விடாதவன் உகந்தவுன்னைவிடுமோ.(நம்மால்போற்றப்பறைதரும்புண்ணியன்)வெறுமையே(க)பச்சையான, இடைச்சிகளுக்கும்சென்று ஆஶ்ரயிக்கலாம்படியிருக்கிற தார்மிகன்.இவர்களுடையஆஶ்ரயணமுபாயமன்று,ருசியாலே.(புண்ணியன்) "𑌕𑍃𑌷𑍍𑌣𑌂𑌧𑌰𑍍𑌮𑌂𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍" "க்ர்ஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று இவர்களுக்கு உபாயமவன்றானிறே. ஸ்நேஹோக்தியாகவுமாம்.

---

களவுக்குஅவனும்பெருநிலைநின்றால் கோயிற்சாந்தையுன்னாலொளிக்கப் போமோ. "அன்றிமற்றோ ருபாயமென்" என்னும்படி மாளிகைச்சாந்தமறைக்கப்போமோ. இப்போதவனுண்டாகவேணுமோ, அவனொருக்காலணைத்து விட்டால் நூறுகுளிக்குநிற்கும். நாமெல்லாருமொக்கஇப்போதேயெழுந்திருந்துபோந்தபின்பு படுக்கையிலே சாய்ந்ததென் ; அந்தியம்போதே பிடித்து வாசலைப் பற்றிக்கொண்டு நின்றிகோள், கட்டும் காவலுமாயிருக்கிறவாசலிலே புகுரப்போமோ அவனுக்கென்ன; (நாராயணன்) எங்களைப்போலே கதவு திறக்குந்தனையும் பார்த்திருக்கவேணுமோ அவனுக்கு. அவனுக்கு உன்பக்கல் புகுந்தால் புறப்படவன்றோ வழியரிது. (நாராயணன்) ஜீவத்வாராவன்றோ அநுப்ரவேஶம், விட்டுப்போகாதார் பேறன்றோவிது. உகவாதார்க்கும் ஸத்தையைநோக்கி உகந்தார்க்கும் வத்ஸலனாயிருக்குமவனன்றோ. ஆசைப்பட்டவுன்னைவிடுமோ. வ்யாப்திக்கு ப்ரயோஜநம்வேண்டினவிடத்தே ஸ்புரிக்கவல்லனாகை அன்றோ. (நாற்றத்துழாய்முடிநாராயணன்)ஆசைப்பட்டாரைரக்ஷிக்கைக்குத் தோள்மாலை யிட்டிருக்கிறவனன்றோ. பேசாதேகிடக்கில் வாய் திறந்திலளென்னாநின்றார்கள்; வாய்திறக்கில் உத்தரஞ்சொல்லிற்று என்பார்களென்று சொல்லி உறங்குவாரைப்போலேகிடந்தாள் (நம்மால்போற்றவித்யாதி) ( நம்மால் ) வெறுமையே (க) பச்சையான இடைச்சிகளுக்கும்சென்று ஆஶ்ரயிக்கலாம்படி யிருக்கிற தார்மிகன். (நம்மால்) அவனுக்குஆகாதாருண்டாய் முடிந்தானல்லகிடீர்; ஜந்மவ்ர்த்தாதிகள் ஏதேனு மமையுங்கிடீர். (போற்ற) இவர்கள் குடிப்பிறப்பிருக்கும்படி. "பல்லாண்டு" என்றிருக்குமவர்களிறே. இவர்களாஶ்ரயணம் உபாயமன்று. (போற்ற) செய்யவேண்டுவது பெரிதாய் முடிந்தானல்லன் கிடீர். (பறைதரும்) ⁎ உக்கமுந் தட்டொளியும். (புண்ணியனால்) தண்ணீர் குடிக்கக்கல்லினஏரியிலே தலைகீழாக

---

(க) பச்சை - உபஹாரம்.

இவனால் (பண்டொருநாள்)முன்பு உன்னைப்போலேயுணராதே படுத்தினாருண்டுகாண் என்கை. (பண்டொருநாள் கூற்றத்தின்வாய் வீழ்ந்த) தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலேயமிழ்ந்திச் சாவாரைப் போலே, * ரிபூணாமபிவத்ஸலரான பெருமாள்பக்கலிலே தப்புச் செய்த. (கும்பகரணனும் தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானோ) உறக்கத்தில் தலையானவனும் உனக்குத்தோற்றுத் தன் உறக்கத்தையுந் தானே தந்து போனானே. அவனது துயில்; உன்னது பெருந்துயில். அவன் ஒருத்தியையிறே பிரித்தது; நீஊராகப் பிரித்து உறங்காநின்றாயே.

---

விழுந்து சாவாரைப்போலே. (புண்ணியனால்) அத்வேஷ மாத்ர முடையார்க்குத் தன்னைப்பெறுகைக்கு ஸுக்ர்தமும், ருசிஜநகனும், உபாயமும், ப்ராப்யனுமாயிருக்கிறவனாலே. "సుహృదం సర్వభూతానామ్" "ஸுஹ்ர்தம்ஸர்வபூதாநாம்" என்றது புறம்பாம்படி, "యది వా రావణ స్స్వయమ్" "யதிவாராவணஸ்ஸ்வயம்" என்னும்படி * ரிபூணாமபிவத்ஸலரானவராலே கிடீர் முடிந்தது. (புண்ணியனால்) "కృష్ణం ధర్మం సనాతనమ్" "க்ர்ஷ்ணம் தர்மம்ஸநாதநம்".

(பண்டொருநாள்) முன்பு உன்னைப்போலே உணராதேநோவுபடுத்தினானொருவனுண்டுகாண். (ஒருநாள்) உணர்ந்திலனென்று ஒருகாலத்திலே கேட்டிருந்தோம், இன்று அநுபவியாநின்றோம். (கூற்றத்தின்வாய்வீழ்ந்த) தான் சிறையிட்டு வைத்த ம்ர்த்யுவினுடைய(க)ஆஸ்யத்திலேவிழுந்த.(புண்ணியனால்கூற்றத்தின்வாய்வீழ்ந்த)பதார்த்ததர்ஸநத்துக்காகவேற்றின விளக்கிலே(உ) விட்டில்புக்கு முடிந்துபோமாப்போலே, இவன்றிருவுள்ளத்தால் அவனநர்த்தத்துக்கு நினைவில்லையென்கை. (கும்பகரணனும்) உறக்கத்தில் தலையானவனும் உனக்குத்தோற்றுத் தன்னுறக்கத்தையுந் தானேதந்து போனானே. நீயுமவனுமாக ஸமயம்பண்ணி யுறங்கப்புக்கு நீ ஜயித்த பின்பு நானிது கைக்கொள்ளுவனல்லேனென்று விட்டானே. ஸ்ரீ பரஸுராமாழ்வானை வென்று பெருமாள் அவன்கையில்வில்லை வாங்கினாப்போலே, நீயுமவனை வென்று, நித்ரையைக் கைக்கொண்டாயோ. (பெருந்துயில்) அவனளவோ உன்னுடைய நித்ரை. அவனதோ துயில்; உன்னதோ பெருந்துயில். அவனுக்கு ஆறுமாஸம் உறங்குகையும், ஆறுமாஸத்துக்கு ஒருக்கால் உணர்ந்திருக்கையுமென்று ஒருவ்யவஸ்தையுண்டிறே; அங்ஙனமொன்றில்லையோ உனக்கு. நீ காலதத்த்வமுள்ளதனையு முறங்குகிறாயன்றோ.இவள் அரைக்ஷணம் புறப்படா தொழிய நெடுங்காலமாய்த் தோற்றுகிற திவர்களுக்கு. அவன் ஒருத்தியுடைய பிரிவுக்கு ஹேதுபூதனானானத்தனையிறே; நீ ஊராகப் பிரிக்கைக்கு ஹேதுபூதையாயுறங்குகிறாயிறே.

---

(க) ஆஸ்யம் - வாய். (உ) விட்டில - விளக்கில்விழுந்திறக்கும் ஓர்வண்டு.

(ஆற்றவனந்தலுடையாய்) இப்படி சொல்லக்கேட்டுப் பெரிய வனந்தலோடே. "க்ர்ஷ்ணக்ர்ஷ்ண" என்ன; எங்களுக்கு அங்கேபோய் * துயிலெழடபாடவேணுமோ, நீயுணரும்படி காணவமையாதோ. (அருங்கலமே) எங்களுக்கெல்லாம் ஶிரோபூஷணமல்லேயோ. ஹாரத்தைப்பண்ணி அதுக்குக்கல்லழுத்தினாப்போலே, நீபுகுந்துஇக்கோஷ்டியை ஸநாதமாக்காயென்கிறார்கள். எங்களுக்குப் பெறுதற்கரியவளல்லேயோ நீயென்னவுமாம். இவர்களார்த்தியைக்கண்டு துணுக்கென்றுவரப்புக்காள்(தேற்றமாய்வந்துதிற) (உ)இரண்டாம்நிலத்திலே கிடக்கிறவளாகையாலே தடுமாறாதே தெளிந்துவந்துதிற என்கிறார்கள். (தேற்றமாய்வந்து திற) ஊராகத்திரண்டுகிடக்கிறது, படுக்கையிற் கிடந்தபடியே வாராதே ஸதஸ்ஸையாய்வந்து திற. "ஸாப்ரஸ்கலந்தீ" "ஸாப்ரஸ்கலந்தீ" என்னும்படி வாராதேகொள் என்கிறார்கள் ... ... ... ... ... ... ... ... ... ... (க0)

---

"நக்ஷமாமி" "நக்ஷமாமி" என்கிற அஸஹ்யாபசாரம் பண்ணினவனை அனைக்ஷணம் உணராதே யிருக்கிற நமக்கு ஒப்பாகச்சொல்லாநின்றார்களென்று, இவர்களுக்குச் சென்று முகங்காட்ட வேணுமென்று, துணுக்கென்று தானுணர்ந்தமை தோற்ற "க்ர்ஷ்ண க்ர்ஷ்ண" என்றாள்; (ஆற்றஅனந்தலுடையாய்) இதொரு உணர்த்தியிருந்தபடியென்!. எங்களுக்கு அங்கேபோய் * துயிலெழ பாடவேணுமோ, நீயுணரும்படி காணவமையாதோ. (ஆற்றவனந்தல்) ஆர்த்தத்வநிகேளாதபடிஅனந்தலினுடையமிகுதி.(க)ஜாலகரந்த்ரத்தாலே, இவளுணர்ந்த படியைப் பார்த்தார்கள்; தங்கள்கோஷ்டிக்கு நாயகரத்நம்போலேயிருந்தாள்;(அருங்கலமே) என்கிறார்கள்.எங்களுக்கெல்லாம் ஶிரோபூஷணமல்லேயோ நீ. ஒருஹாரத்தைப்பண்ணி அதிலேயொரு ரத்நத்தையழுத்தினால்அந்தரத்நம் அந்தஹாரத்தைவிளக்குமாப்போலே, இத்திரளை ஸநாதமாக்கப்பாராய். (அருங்கலமே) எங்களுக்கு பெறுதற்கரியவளல்லேயோ நீ.அவள்புறப்பட அவனுமொக்கப்புறப்பட்டுத் தங்களைத்தலைமேலே கொள்ளுமென்றிருக்கிறார்கள். இவர்கள் ஆர்த்தியைக்கேட்டு துணுக்கென்று வரப்புக்காள்;(தேற்றமாய்வந்து திற)பயப்பட்டு(உ)மேல்நிலங்களில் நின்று தடுமாறாதே வந்திழிஞ்சு திற. அங்ஙனன்றிக்கே, ஊராகத் திரண்டு கிடக்கிறது, அவர்களிலே உன்னையும் நியமிக்கவல்லாருண்டு; அவர்கள்முன்னே படுக்கையில் சாய்ந்தபடியே வாராதே, உன்னைப்பேணிக்கொண்டு-ஸதஸ்ஸையாய், வந்து திற. "ஸாப்ரஸ்கலந்தீ" "ஸாப்ரஸ்கலந்தீ" என்னும்படிவாராதேகொள். ... ... ... ... ... க0

---

(க) ஜாலகரந்த்ரம்-ஜன்னல்த்வாரம். (உ) இரண்டாம்நிலம் - மேல்நிலம்-மேல்மெத்தை.

## ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அ.—பத்தாம்பாட்டு. (நோற்றுத்யாதி) இப்பாட்டில், உபாய நிஷ்டனை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(நோற்று) ஸித்தஸாதந பரிக்ரஹம் பண்ணி. (சுவர்க்கம்) ஸ்வரூபமான ப்ராப்யத்தை. (புகுகின்ற) அநுபவிக்கிற. (அம்மனாய்) ஸ்வாமிநியானவளே. (வாசல்திறவாதார் - மாற்றமும் தாராரோ) த்வதநுபவவிரோதியான வாசலை-அஹங்காரத்தை நீக்கி, எங்களை உன்னை யநுபவிப்பியாவிடிலும் நாங்கள் கேட்டு வாழும்படியான ஒருவார்த்தையுமரிதோ. அவனேயெழுந்திருக்கவொட்டாவிடிலும் இருந்தவிடத்தே யிருந்து வார்த்தைசொன்னலாகாதோ என்று பாவார்த்தம்.

இப்போது அவனிங்குண்டோ, ஏன்பழியிடுகிறிகோளென்ன (நாற்றத்துழாய்முடி) இப்போது அவனிங்கில்லாவிடில்பரிமளமேதென்ன; அவனொருக்காலணைக்க ஒன்பதுகுளிக்குப் பரிமளம் நிற்குமேயென்ன; கட்டுங்காவலுமானவிடத்தே அவனுக்குப்புகுரப்போமோவென்ன; (நாராயணன்) வேண்டுமிடத்தே ஆவிர்ப்பவிக்கைக் கன்றோ அவனுடைய வ்யாப்தியென்ன; (நம்மால்போற்றப் பறைதரும் புண்ணியனால்) நம்மாலே போற்றப்பட்டவனைக் கொண்டு புருஷார்த்தப்ரதனான நாராயணனாலே.

(பண்டொருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ) முன்பொரு தமோபிபூதமான காலத்திலே ம்ர்த்யுவினுடைய வாயிலே விழுந்த தாமஸனான கும்பகர்ணனும், உன்துயிலுக்குத் தான்தோற்று, உனக்கே தன்னுடைய பெருந்துயிலையும் தானே தந்தானோ. இவ்விடத்திலே "கும்பகரணன்" என்கிறது-தமோகுணத்தை. தமோகுணந்தன்னையன்றியிலேஇவளுக்குண்டான நித்ரையைக்கண்டு இவளுடைய நித்ராஜநகத்வஶக்திக்குத் தான் தோற்றுத் தன்னுடைய நித்ராஜநகத்வஶக்தியையும் தந்தானோஎன்று ரஹஸ்யம். ஸாத்விகனான இவ்வதிகாரிக்கு நித்ரையாவது-"ప్రాజ్ఞేనాత్మనాసంపరిష్వక్తో బాహ్యం కిఞ్చనవేద" "ப்ராஜ்ஞேநாத்மநாஸம்பரிஷ்வக்தோபாஹ்யம் கிஞ்சந வேத" என்கிறபடியே ஸ்வாநுபவதஶையிலேஇதரவிஷயங்கள்தோற்றாதிருக்கை.

இப்படி யிவர்கள்சொன்னவாறேஅவளெழுந்திருந்துசோம்பல் முறிக்க (ஆற்ற வனந்தலுடையாய்) மிகவும் சோம்பலையுடையவளே. சோம்பலாவது - வ்யாபாராந்தராக்ஷமதை. அதளவ, (அருங்கலமே) துர்லபமான ஆபரணமே. "ஆற்றவனந்தலுடையாய், அருங்கலமே" என்கையாலே-"కిమివహిమధురాణామ్" "கிமிவஹி மதுராணாம்" என்கிறபடியே சோம்பல் முறிக்கையும் துர்லபமான

ஆபரணம் போலே அத்யாகர்ஷகமாயிருக்கிறது என்றுமாம். இவர்களாற்றாமையைக்கண்டுசடக்கெனவந்துதிறக்கப்புக;(தேற்றமாய்வந்து திற)என்கிறார்கள். நாங்கள் புறக்கட்டிலேயிருக்கிறோமாகையாலே இருந்தபடியே வாராமே, ஸதஸ்ஸையயாய்வந்து திற என்கிறார்கள்.தேற்றமாய்வந்துதிற என்கையாலே-இவ்வதிகாரிக்கும்லோககர்ஹை வாராமல் லௌகிகாநுவர்த்தநம் கார்யமென்றதாய்த்து. கo.

அ.—பதினோராம்பாட்டு. எல்லாவற்றாலும் அபிஜாதையா யிருப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.ஆபிஜாத்யத்தால் க்ர்ஷ்ணனோடொப்பாளொருத்தி யிவள்.

மூ.—கற்றுக்கறவைக்கணங்கள்பலகறந்து
செற்றார்திறலழியச்சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாதகோவலர்தம்பொற்கொடியே
புற்றரவல்குற்புனமயிலேபோதராய்
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்துநின்
முற்றம்புகுந்துமுகில்வண்ணன்பேர்பாடச்
சிற்றாதேபேசாதேசெல்வப்பெண்டாட்டிநீ
எற்றுக்குறங்கும்பொருளேலோரெம்பாவாய். (கக)

ப-ரை. எல்லாவகையாலும் அபிஜாதையாயிருப்பா ளொருத்தியைப்பார்த்து, கன்று-கன்றுகளையீன்ற, கறவை - பசுக்களினுடைய, பல-அநேகங்களாயிருக்கிற, கணங்கள் - ஸமூஹங்களை, பால்மிக்கிருக்கையாலே முலைக்கடுப்புத்தீரும்படி, கறந்து - கறப்பவர்களாய், செற்றார் - க்ர்ஷ்ணன் பெருமை பொறாதவரான பகைவருடைய, திறல் - வலிமையானது, அழிய-அழியும்படி, சென்று-தாமேசென்று, செருச்செய்யும்-போர்செய்யுமவர்களாய்,படையெடுத்தவரப்பார்த்திருத்தல்,நிராயுதபாணிகளுடன் எதிர்த்தல்முதலிய,குற்றமொன்று - ஒருவகைக்குற்றமும், இல்லாத - இல்லாதவர்களான, கோவலர்தம்-பசுமேய்க்கும் இடைச்சாதியிலே பிறந்த, பொற்கொடியே-பொன்கொடியோலே அழகிய வடிவையுடையளாய், புற்று - புற்றிலிருக்கிற, அரவு - பாம்பின் படத்தையொத்த, அல்குல் - நிதம்பத்தையும், புனம் - காட்டில் தன்னிச்சைப்படி திரிகிற, மயிலே-மயில்போன்றசாயலையுமுடையளாய், செல்வம்-க்ர்ஷ்ணகுணாநுஸந்தாநமாகிற ஸம்பத்தையுடைய, பெண்டாட்டி - பெண்பிள்ளாய், போதராய்-வாராயென்ன; நாம்புறப்படும்படி எல்லாரும் வந்தாரோவென்ன; சுற்றம் எல்லாரும்-எல்லாபந்துக்களும், தோழிமாரெல்லாரும்-எல்லாத்தோழிமார்களும், வந்து - திரண்டுவந்து, நின் - உன்னுடைய, முற்றம்-முற்றத்திலே, புகுந்து-புக்கு,உன்னாலுகக்கப்படுமவனாய்,முகில்-மேகம்போன்ற, வண்ணன்-திருநிறத்தை யுடையவனுடைய, பேர் - திருநாமங்களை, பாட - ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடாநிற்கச்செய்தே, துயிலொழிந்தமைக் கடையாளமாக, நீ—,சிற்றாது - அசையாமலும், பேசாது - பேசாமலும், என்பொருளுக்கு-என்ன ப்ரயோஜநத்துக்காக, உறங்கும் - உறங்குகிறாயென்கிறார்கள்.

அ.—பதினோராம்பாட்டு. (கற்றுக்கறவை) க்ர்ஷ்ணன் ஊருக்காக ஒருபிள்ளையாய் எல்லாராலும் கொண்டாடவளர்ந்தாப்போலே, ஊருக்காக ஒருபெண்பிள்ளையாய், "𑌪𑌤𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌸𑍁𑌲𑌭𑌮𑍍" "பதிஸம்

வ்யா.—(கற்றுக்கறவை) எல்லாம் தலைநாகுகளாயிருக்கை. இதுக்கு ஹேது நித்ய ஸூரிகள் பகவத் ஸ்பர்ஶத்தாலே பஞ்சவிம்ஶதி வார்ஷிகராயிருக்குமாப்போலே, இப்பசுக்களும் க்ர்ஷ்ணஸ்பர்ஶத்தாலே கீழ்நோக்கிப் பிராயம்புகுகை. "భవామిదృష్ట్వాచపునర్యువేవ" "பவாமித்ர்ஷ்ட்வாசபுநர்யுவேவ" என்று-பகவத்ஸ்பர்ஶம் (க)இளகிப்பதிக்கப்பண்ணுமிறே. (கணங்கள்பல) தனித்தனியே யெண்ணிமுடியாமையன்றிக்கே, ஸமூஹங்களும் எண்ணிமுடியாது. "రథకుఞ్జరవాజిమాన్" "ரதகுஞ்ஜரவாஜிமாந்" என்னுமாப்போலே, "பல" என்னுமித்தனை. ஆத்மாக்களுக்குத் தொகையுண்டாகிலிறே பசுக்களுக்குத் தொகையுள்ளது. (கறந்து) ஈஶ்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்க

---

யோகஸுலபம்" என்னும்படி பருவத்தையுடையளாய், அவனைப் பெறுகைக்கு நோற்பேன் நானோ, அவன்தானே வேணுமாகில் நோற்று வருகிறானென்று கிடக்கிறாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(கற்றுக்கறவை) கறக்கும் பருவமா யிருக்கச்செய்தே கன்றுநாகாயிருக்கை. முக்தர் பஞ்சவிம்ஶதிவார்ஷிகராய்க் கீழ்நோக்கி வயஸ்ஸுபுகுமாப்போலே, இவையும்(க)இளகிப்பதித்திருக்கும். அவர்கள், பரத்வாநுஸந்தாநத்தாலே; இவை, மநுஷ்யத்வேபரனான க்ர்ஷ்ணனுடைய ஸ்பர்ஶத்தாலே. முலைசரிந்தாரைப் பாராத ராஜகுமாரனைப்போலே, கன்றுமேய்க்கப்பெற்றால் பசுக்களைப்பாரான். [கன்றுமேய்த்தினிதுகந்த] "திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி" என்னு-பசுமேய்த்து உகக்கும்; கன்றுமேய்த்து இனிதுகக்கும். ரக்ஷ்யவர்க்கத்திலே தன்கைகால் நீட்டமாட்டாதவர்களையிறே யுகப்பது. கன்றுமேய்க்கை யொருதலையானால் பசுக்களும் நித்யஸூரிகள் ஸ்தாநேயாமித்தனை. [காளாய்] அவற்றையும்இளகிப் பதிப்பித்து அவற்றோட்டை ஸம்பந்தத்தாலேதானுமிளகிப்பதித்திருக்கும்; "వత్సమధ్యగతం బాలమ్" "வத்ஸமத்யகதம்பாலம்" என்னும்படியே. (கற்றுக்கறவை) [భవామిదృష్ట్వాచపునర్యువేవ-பவாமித்ர்ஷ்ட்வாசபுநர்யுவேவ] சக்ரவர்த்தி யிளகினாப்போலே இவனுக்குக்கண்ணழிக்கலாம்படி புக்கவிடத்தே புக்குப் புறப்பட்ட விடத்தே புறப்பட்டு இவனுக்கு * முன்னோட்டுக் கொடுக்கவற்றாய், இவனுக்கு ஒதுங்குகைக்கு நிழலாயிறேயிருப்பது. "இட்டமானபசுக்கள்." (கணங்கள்பல) தனியே யெண்ணமுடியாமையே யன்றிக்கே, ஸமூஹங்களு மெண்ணமுடியாது. "రాజాదశరథోనామ రథకుఞ్జరవాజిమాన్" "ராஜாதஶரதோநாம ரதகுஞ்ஜரவாஜிமாந்" என்னுமாப்போலே பலவென்னுமத்தனை. (கணங்கள்பல) "నారాః" "நாராঃ" என்று – ஆத்மஸமூஹங்கள் பல. "బహూనామ్" "பஹூநாம்" என்றும், "பற்பல்லாயிரமுயிர்" என்றும் – ஆத்மாக்களுக்கு ஸங்க்யையுண்டாகிலும், "బహవోనృపకల్యాణగుణాః" "బహవోదుర్లభాశ్చైవ"

---

(க) இளகிப்பதிக்கை - இளமைத்தன்மைபெருகுகை.

ளுக்கும் நியமநாதிகளைப் பண்ணுமாப்போலே, இடைச்சாதியில் (க) மெய்ப்பாட்டாலே அடங்கக்கறக்கவல்ல ஸாமர்த்யம். பாலும் நெய்யும் கொண்டு விநியோகமில்லாதபடி ஸம்ர்த்தமாகையாலே, முலைக்கடுப்புக்கெடக் கறந்தென்றுமாம்.

(செற்றார்) இவர்களுக்கு ஶத்ருக்களாகிறார்கள்-க்ர்ஷ்ணனுடைய பெருமை பொறாதவர்கள். (திறலழிய) "தேவர்களும் எனக்கெதிரன்று" என்றிருக்கும் கம்ஸாதிகளுக்கும் புகுரவொண்ணாத மிடுக்கை யுடையவர்கள். (சென்றுசெருச்செய்யும்) எதிரிகள் வந்தால்

---

"பஹவோந்ர்பகல்யாணகுணா:" "பஹவோதுர்லபாஶ்சைவ" "எண்ணில் பல்குணங்கள்" என்று சொல்லுகிற பகவத்குணங்களுக் கெல்லையுண்டாகிலும் இப்பசுக்களுக் கெல்லையில்லை.(பலகறந்து) அநேக ரித்விக்கள் செய்யக்கடவ சடங்கை அதில் கூர்மையுடையவனொருவனே செய்யுமாப்போலேயும், ப்ராஹ்மணர் வேதத்தையடைய அதிகரிக்குமாப்போலேயும், க்ஷத்ரியன் பருவம் நிரம்புவதற்கு முன்னே யுத்தத்திலே(ங)நிலவனுமாப்போலேயும், ஈஶ்வரனொருவனுமே ஸர்வாத்மாக்களினுடையவும் கர்மாநுகுணமாகநாமரூபங்களைப் பண்ணி நியமநாதிகளைப் பண்ணுமாப்போலேயும், பசுக்கள் அநேகமாகிலும் ஜாதியில் (க)மெய்ப்பாட்டாலும்,ஜாத்யுசிதவர்த்தியாகையாலும், ஒருத்தனே அடங்கக்கறக்கவல்ல ஸாமர்த்யம். அரியதுசெய்யவல்ல குடியிலே பிறந்தோம் என்ன, உன்னையல்லது அறியாத எங்களுக்கு அரியையாக ஒண்ணாதுகாண்.

(செற்றார்) இவர்களுக்கு சத்ருக்களாகிறார் - க்ர்ஷ்ணனுடைய மினுக்கம்பொறாதவர்கள். "[illegible]" "ஶத்ரோஸ்ஸகாஶாத்ஸம்ப்ராப்த:" என்று-ராவணஸகாஶத்தினின்றும் வந்தானென்னாதே, நம்மெதிரியான(ச)பையலோலக்கத்தினின்றும் வந்தானென்று அங்கதப்பெருமாள் பேசினாப்போலே, ஆண்டாளும் இவ்வூரில் ஸம்ர்த்தி பொறாதவர்களை ஶத்ருக்களென்கிறாள். பகவத்ஸம்ர்த்தி பொறாதார் பாகவதர்களுக்கு ஶத்ருக்கள்; பாகவதஸம்ர்த்தி பொறாதவர்கள் எம்பெருமானுக்கு ஶத்ருக்கள். இரண்டுமுண்டிறே கம்ஸனுக்கு. "தீயபுந்திக்கஞ்சன்" இத்யாதி, "சாதுசநத்தை நலியும்."பாண்டவர்களுக்குஶத்ருக்கள்நமக்குஶத்ருக்களென்று, "[illegible]""த்விஷதந்நம்" என்றானிறே க்ர்ஷ்ணன்; இவள்தானும்,"மாயனிராவணன்"என்று-செவ்வைப்போரறியாதபையல்என்றருளிச்செய்தாள்.(செற்றார்திறலழிய)பஸ்மதாரியான ருத்ரன்,ப்ராஹ்மணனைப்போலேஒத்துச்சொல்லித்திரியும்ப்ரஹ்மா,அப்ஸரஸ்ஸுக்களை(உ)மெய்க்காட்டுக்கொள்ளுமிந்த்ரன்,அந்யபரனாய்க்கிடந்துஉறங்குமீஶ்வரன், இவர்க

---

(க) மெய்ப்பாடு - ஸ்வபாவம். (உ) மெய்க்காட்டுக்கொள்ளல் - எண்ணிக்கொள்ளல். (ங) நிலவன் - வல்லவன் (ச) பையல் - ராவணன்.

பொருகையன்றிக்கே,இருந்தவிடங்களிலேசென்றுபொருகை. "అభియాతా ప్రహర్తాచ" "அபியாதாப்ரஹர்த்தாச" என்று - சக்ரவர்த்தித் திருமகனைப்போலே இவர்கள்வீரம். (குற்றமொன்றில்லாத) எடுத்துவரப்பார்த்திருக்கும் குற்றமில்லை; கையிலாயுதம் பொகட்டவர்களையெதிர்க்குங்குற்றமில்லை யென்றுமாம். அழியச்செய்யாநின்றார்களென்று க்ர்ஷ்ணனுக்கு முறைப்பட்டால் "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்னும்படி பிறந்தவர்களென்றுமாம். "సాధురేవ సమన్తవ్యః" "ஸாதுரேவஸமந்தவ்ய:" என்றிறே அவன்படி. (கோவலர்தம் பொற்கொடியே) "జనకానాం కులే కీర్తిమాహరిష్యతి మే సుతా" "ஜநகாநாம் குலேகீர்த்திமாஹரிஷ்யதிமேஸுதா" என்னும்படியே ஊருக்காக ஒரு பெண்பிள்ளை. (பொற்கொடி) தர்ஶநீயமாயிருக்கையும், "పతిసంయోగ సులభం వయః" "பதிஸம்யோகஸுலபம்வய:" என்கிறபடியே பர்த்தாவாகிற கொள்கொம்பையொழிய ஜீவியாமையும். "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்" என்றிறே யிருப்பது. (புற்றரவல்குல்)தன்னிலத்தில்ஸர்ப்பம்போலேஒசிவையும்அகலத்தை

---

ளடங்கலும் நமக்கெதிரோ என்றிருக்கும் கம்ஸனுடைய மிடுக்கு அழிய. (சென்றுசெருச்செய்யும்)எதிரிகள்வந்தால்பொரவிருக்கையன்றிக்கே இருந்தவிடங்களிலே சென்றுபொருகை. "అభియాతా ప్రహర్తాచ" "அபியாதாப்ரஹர்த்தாச" என்ற - சக்ரவர்த்தித் திருமகனைப்போலே இவர்கள் வீரம். எதிரிகள்வந்து ஊரை அடைமதிகள் படுத்தவெல்லுகைகுற்றமானுப்போலே,நாங்கள்வரப்புறப்படாதேயிருக்கை உனக்குக்குற்றமன்றோ. ராஜாக்கள்எதிரிகளைத்தோற்பிக்கும்படிவ்யாபரித்தார்களே யாகிலும், அந்தஃபுரத்தில் வந்தால் எளியராயன்றோவிருப்பது.(குற்றமொன்றில்லாத)எடுத்துவரப்பார்த்திருக்கும் குறையில்லை, எதிரிகள்கையி லாயுதத்தைப் பொகடக்கொன்றார்களென்னும் குறையில்லை;அழியச்செய்யா நின்றார்களென்று க்ர்ஷ்ணனுக்கு முறைப்பட்டால் "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படி பிறந்தவர்கள். (குற்றமொன்றில்லாத கோவலர்) "అపిచేత్సుదురాచారో భజతే మామనన్యభాక్ । సాధురేవ సమన్తవ్యస్సమ్యగ్వ్యవసితో హి సః" "அபிசேத்ஸுதுராசாரோபஜதேமாமநந்யபாக்|ஸாதுரேவஸமந்தவ்யஸ்ஸம்யக்வ்யவஸிதோஹிஸ:" என்றிறே யவன்படி. "నిర్దోషం విద్ధి తం జన్తుం ప్రభావాత్పరమాత్మనః" "நிர்தோஷம்வித்திதம்ஜந்தும்ப்ரபாவாத்பரமாத்மந:" என்னக்கடவதிறே. (கோவலர்தம்பொற்கொடியே) "జనకానాం కులే కీర్తిమాహరిష్యతి మే సుతా" "ஜநகாநாம்குலேகீர்த்தி மாஹரிஷ்யதிமேஸுதா" என்கிறபடியே ஊருக்காக ஒருபெண்பிள்ளை. தர்ஶநீயமாய் உபக்நத்தோடே சேர்க்கவேண்டும்படியான அவஸ்தையுமா யிருக்கை; "పతిసంయోగసులభమ్" "பதிஸம்யோகஸுலபம்" என்கிறபடியே. [ஆவிக்கோர்பற்றுக்கொம்பு] உபக்நத்தை யொழிய நிற்கவற்றோ கொடி.

யுமுடைய அல்குலை யுடையாய். இவர்கள் இத்தனை சொல்லுவா னென்னென்னில்; "யாஸ்த்ரியோத்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸாயயு:" "யாஸ்த்ரியோதர்ஷ்டவத்யஸ்தாः பும்பாவம் மநஸாயயுः" என்னும்படியே பெண்களை ஆண்களாக்கு மழகிறே. "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" "பும்ஸாம் தர்ஷ்டிசித்தாபஹாரிணம்" என்று — அவன் ஆண்களைப் பெண்ணுடை யுடுக்கப்பண்ணுமாப்போலே. (புனமயிலே) தன்னிலத்தில் மயில். க்ர்ஷ்ணனையும் தங்களையும் பிச்சேற்ற வல்ல அளகபாரத்தை யுடையளாகை. "பொற்கொடியே" என்கையாலே — ஸமுதாயஶோபையைச் சொல்லிற்று; மேல் விஶேஷணத்வயத்தாலும்—அவயவஶோபையைச் சொல்லுகிறது. (போதராய்) "ஶோபயந் தண்டகாரண்யம்" "ஶோபயந் தண்டகாரண்யம்" என்னும்படியே — நாங்கள் களிக்கும்படி புறப்படாய்.

நாம்புறப்பட எல்லாரும்வந்தாரோஎன்ன (சுற்றமித்யாதி) "சுற்றத்துத்தோழி" என்கிறது—இவ்வூரடங்க இவளுக்கு வுறவுமுறை

---

அவனை யொழிந்தாலும் உங்களையொழிய நிற்கமாட்டே னென்று சொல்லி வைப்புதியே. எங்களையுங் கூட்டிக்கொண்டு, உனக்குக் கொள்கொம்பான க்ர்ஷ்ணனை அநுபவிக்கப்பாராய். (புற்றரவல்குல்) புறம்பேபுறப்பட்டு புழுதிபுடைத்த உடம்பன்றிக்கே தன்னிலத்திலே வர்த்திக்கிற ஸர்ப்பத்தினுடைய பணமும் கழுத்தும் போலே ஒளியையும் அகலத்தையு முடைய நிதம்ப ப்ரதேஶத்தை உடையவளே. "பும்பாவம் மநஸாயயு:" "பும்பாவம்மநஸாயயுः" என்கிறபடியே ஸஜாதீயையான பெண்களும் நாயகஸமாதியிலே சொல்லுகிறபடிபாரீர். "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" "பும்ஸாம்தர்ஷ்டிசித்தாபஹாரிணம்" என்று அவர் ஆண்களையும் பெண்ணுடை யுடுக்கப்பண்ணுமாப்போலே, பெண்களை ஆண்களாக்குகிறது இவளுடைய அல்குல். (புனமயிலே)தன்னிலத்திலே நின்ற மயிலினுடைய தோகைபோலேயிருக்கிற அளகபாரத்தை யுடையவளே. க்ர்ஷ்ணனையும் தங்களையும் பிச்சேற்றவல்ல அளகபாரத்தை யுடையவள்; "தோகைமாமயிலார்கள்." "பொற்கொடி" என்கையாலே — ஸமுதாயஶோபை; "புற்றரவல்குல்" என்று அவயவஶோபை. (போதராய்)எங்களையவனோடே கூட்டவேண்டா, எங்களுக்கு தாரகமாக நாலடி நடந்து காட்டாய். (போதராய்) இவளை முன்னே போகவிட்டு, இவள்நடையழகுகண்டு பின்னேபோகையிலேகாணும் ஆசை. (போதராய்) "ஶோபயந் தண்டகாரண்யம்" "ஶோபயந் தண்டகாரண்யம்" என்கிறபடியே நாங்கள் நிற்கும்படி புறப்பட்டு, புனத்தை மயில் சிறப்பிக்குமாப்போலே, இந்த ஸ்த்ரீவநத்தையும் சிறப்பியாய்.

நான் புறப்பட, எல்லாரும் வந்திகோளோவென்ன(சுற்றத்துத் தோழிமார்) இவ்வூரடங்க இவளுக்குத் தோழிமார்; இவ்வூரடங்க

யென்கையாலே.(நின்முற்றம்புகுந்து)"ఉత్తరంతీరమాసాద్య" "உத்தரம் தீரமாஸாத்ய" என்கிறபடியே எங்களுக்கு ப்ராப்யமான முற்றத்திலேபுகுந்து. இவர்களுக்கு ப்ராப்யமானபடியென்னென்னில்;"முற்றம்புகுந்து முறுவல்செய்துநின்றீர்" என்றும்,"முற்றத்தூடுபுகுந்து நின்முகம் காட்டி" என்றும் - ஶேஷியானவனுக்கும் ப்ராப்யமான முற்றமாகையாலே ஶேஷபூதர்களான எங்களுக்குச் சொல்லவேணுமோ. புகுந்து கொள்ளப்புகுகிற கார்யமென்னென்ன (முகில்வண்ணன் பேர் பாட) நீ யுகக்கும் அவனழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டு அவன் திருநாமத்தைப் பாடச்செய்தேயும்.

(சிற்ருதே பேசாதே) "முகில்வண்ணன்" என்றவாறே, அவ்வடிவை நினைத்துப்பேசாதேகிடந்தாள். (சிற்ருதே) சிற்றுதல்-சிதறுதல். உணர்ந்தமைக்கடையாளமான சேஷ்டையைப் பண்ணுதே. இவள் சேஷ்டிதமும் வார்த்தையும் தங்கள் கண்ணுக்கும் செவிக்கும் போக்யமாகையாலே இன்னுதாகிருர்கள்.(செல்வப்பெண்டாட்டி நீ) உன்னேடு கூடுமது எங்களுக்கெல்லாம் ஐஶ்வர்யமுமான நீ. க்ர்ஷ்ண குணநுஸந்தாநத்தாலே புஷ்கலையான நீ என்ன

---

இவளுக்கு உறவு. இவளுடைய ஸம்பந்தமுடையார், இவள்தன்னைப்போலே அநந்யப்ரயோஜநைகளாய், "இன்று வந்தித்தனையுமமுதுசெய்திடப்பெறில்" என்றிருக்குமவர்கள். (எல்லாரும் வந்து) உன்னையொழிய வொருப்ரயோஜந முண்டென்றிருக்கிலன்ருே இவர்களுக்குக் கண்ணுறங்குவது. (நின்முற்றம்) ஒரு த்ரிபாத்விபூதியிலுமிடமுடைத்தாயிருக்கை. (புகுந்து) "ఉత్తరంతీరమాసాద్య" "உத்தரம் தீரமாஸாத்ய"என்கிறபடியே ப்ராப்யஸ்தலத்தேபுகுந்து. இவர்களுக்குப்ராப்யமானபடி யென்னென்னில்;"முற்றத்தூடுபுகுந்து,""முற்றம்புகுந்து முறுவல்செய்து நின்றீர்." ஶேஷிக்கு ப்ராப்யமானது ஶேஷபூதனுக்குப்ராப்யமாகக்கேட்கவேணுமோ. (முறுவல்செய்து) ஏகரூபமானவனையும் விக்ர்தனுக்கும்முற்றம். புகுந்து கொள்ளப்புகுகிறகார்யமென்னென்ன (முகில்வண்ணன் பேர்பாட) "మేఘశ్యామమ్" "மேகஶ்யாமம்" என்கிறவடிவழகையும், "సర్వానర్థినోదృష్ట్వా" "ஸர்வாநர்த்திநோத்ர்ஷ்ட்வா" "எனக்கேதன்னைத்தந்த" என்றுஔதார்யத்தையும் சொல்லி நீ பாட, நாங்களும் உன்பக்கமே நின்று அத்தைப் பெறுகைக்காக, நீயுகக்கும் அவன் வடிவழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டுத் திருநாமத்தைப் பாடச்செய்தேயும்.

(சிற்ருதே பேசாதே) அவ்வடிவை நினைத்து அங்கங்களைப் பரிஷ்பந்திப்புதல், வார்த்தைபேசுதல்செய்யாதேகிடக்க, இவள்சேஷ்டிதமும் வார்த்தையும் கண்ணுக்கும்செவிக்கும் போக்யமாகையாலே கண்ணையுஞ் செவியையும் சேரப் பட்டினிகொள்ள வேணுமோ என்றுஇன்னுதாகிருர்கள்.(செல்வப்பெண்டாட்டிநீ)உன்னைநீபிரிந்து

வுமாம். இங்கே கூடுபூரித்துக்கிடந்ததோ என்ன; இல்லையாகில் (எற்றுக்கு உறங்கும்பொருள்) எங்கள்பாடே புறப்படாதே உறங்குகைக்கு ஒருப்ரயோஜநமுண்டோ. "அடியார்கள் குழாங்களை-உடன் கூடுவதென்றுகொலோ" என்று திரளோடே அநுபவிக்கும் அநுபவத்தைவிட்டு, கைவல்யம்போலே கிடக்கிற கார்யமென் என்னவுமாம். (எற்றுக்கு உறங்கும்பொருள்) உன்னுடைய உத்தேஶ்யத்தைப் பாராதே, எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே, க்ர்ஷ்ணனுடைய நிரதிஶயபோக்யதையைப் பாராதே, எதுக்காகக் கிடக்கிறாய். ... ... ... ... ... ... ... ... கக

---

அறியாயே.உன்னோடேகூடுவதேஎங்களுக்குஎல்லாஐஶ்வர்யமானநீ. உன்னுடைய உத்தேஶ்யம் நீ கூடுபூரித்துவைத்தால், எங்களுக்கு உத்தேஶ்யம்பெறவேண்டாவோ.இங்கே கூடுபூரித்துக்கிடக்கிறதோவென்ன; (எற்றுக்குறங்கும் பொருள்) உள்ளு கூடுபூரித்த தில்லையாகில் எங்கள் ஆர்த்தத்வநிகேட்டால்கண்ணுறங்குமோ.எங்கள்பாடே புறப்படாதே யுறங்குகிறதுக்கொரு ப்ரயோஜநமுண்டோ. "அடியார்கள் குழாங்களை- உடன் கூடுவதென்று கொலோ"என்றிருக்கும்படிஅழகிதாயிருந்தது,அவனைத்தனியநுபவிக்கைகைவல்ய மோக்ஷத்தோடொக்கு மத்தனை. "தொண்டீரெல்லீரும் வாரீர்" என்றிருக்கவேண்டாவோ. (எற்றுக்குறங்கும்பொருள்) உன்னுடைய உத்தேஶ்யத்தைப் பாராதே, எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே,க்ர்ஷ்ணனுடைய நிரதிஶய போக்யதையைப் பாராதே, ஏதுக்காகக்கிடக்கிறாய். (எற்றுக்குறங்கும் பொருள்) அவனை யுகப்பிக்கப் பார்த்தாயாகில் அவனுடையானையு முகப்பிக்க வேணுங்காண். ஸ்வப்ரயோஜநமான கைங்கர்யத்தைக் காட்டில் ஒருவாசிகண்டிலோமே உனக்கு. உன்னையுமவனையும் பொருந்தவிட நாங்கள்வேணும்;அவனைப்பிரிந்தவன்று, வ்ர்த்தகீர்த்தநம் பண்ணி தரிப்பிக்கைக்கு நாங்கள்வேணும்; நீயுமவனுமாக அநுபவியாநின்றால் (க) எடுத்துக்கைநீட்ட நாங்கள் வேணும்.ஆனபின்புஎங்களையொழியஉனக்குஉறங்கவிரகுண்டோ.கக

ஸ்வாபதேஶவ்யாக்யாநம்.

அ.—பதினோராம்பாட்டு.(கற்று)இத்யாதி. இப்பாட்டில், ஈஶ்வரனே உபாயோபேயமென்றுஅத்யவஸித்திருப்பார்க்குமிகவும்ஆதரணீய விஷயமான அதிகாரியை யெழுப்புகிறார்கள்.

வ்யா.—(கற்றுக்கறவை) ஸஸந்தாநரான சிஷ்யர். (கணங்கள் பல) அவர்களுடைய பலவான ஸமூஹங்களை. (கறந்து) அவர்களுடைய அபிநிவேஶாநுகுணமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி.

(செற்றார்திறலழிய) செற்றாருண்டு-உபாயாந்தரபரரும், உபேயாந்தரபரரும்; அவர்களுடையதிற லுண்டு-ஸ்வார்த்தபரதை, அழிய-

---

(க) எடுத்துக்கைநீட்டுகை - பரிசர்யைபண்ணுகை,

நஶிக்கும்படி. (சென்றுசெருச்செய்யும்) தாங்களே விஜயயாத்ரையைப் பண்ணி அவர்களோடேவர்த்திக்கிற. (குற்றமொன்றில்லாத) பூர்வோத்தராகங்களி லொன்றுமில்லாத. (கோவலர்தம்) "அவனே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்குமவர்களுக்கு. (பொற்கொடியே) ஸ்ப்ரஹணீயமான பொற்கொடிபோன்ற திருமேனியை யுடையவளே. ஜ்ஞாநவைஶத்யத்தை யுடையவளே என்றுமாம். (புற்றரவல்குல்) கீழ், பொற்கொடியென்று – பக்தியைச்சொல்லுகையாலே, அல்குலென்று – ஸ்வவிஷயத்திலே படிந்த பரமபக்தியைச் சொல்லுகிறது. (புனமயிலே) அளகமென்று - ஸ்வாபதேஶத்தில் வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே, வ்யாமோஹந்தான் இதரவிஷய வைராக்ய பூர்வகமாய் ஸ்வவிஷய விரஹாஸஹிஷ்ணுவான ப்ரேமரூபஜ்ஞாநமாகையாலே, "புனமயிலே" என்று – பரமபக்தியை யுடையவளே யென்கிறது. (போதராய்) நீபுறப்பட்டு வரவேணும்.

நாம்புறப்பட்டு வருகைக்கு நம்முடையவர்களெல்லாரும் வந்தார்களோவென்ன (சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து) உனக்குபகவதநந்யார்ஹஶேஷபூதரான பாகவதரெல்லாரும்வந்து. (நின்முற்றம்புகுந்து) பரமப்ராப்யமான உன்னுடைய திருமுற்றத்திலே புகுந்து. (முகில்வண்ணன்பேர்பாட) பரமோதாரனும்ஶ்ரமஹரமானவடிவையுடையவனுடைய திருநாமத்தை நீபுறப்பட்டு வருவதி என்றுபாட.

(சிற்றாதே பேசாதே) பரக்க வொருவ்யாபாரத்தையும் பண்ணாதே, வார்த்தையுஞ்சொல்லாதே. (செல்வப்பெண்டாட்டி) பகவத்குணங்களை யொருமடைசெய்து புஜிக்கையாகிற ஸம்பத்தையுடைய நிருபாதிகபாரதந்த்ர்யமுடையவளே. (நீ) இஸ்ஸம்பத்தென்றும்மாறாமல் செல்லுகிற நீ. (உறங்கும்பொருள் எற்றுக்கு) உறங்குகிறதுக்கு ப்ரயோஜநமேது. எங்களை அகற்றுகையே ப்ரயோஜநமோ, இன்னம் ஸம்ஸாரிகளை சேதநராக்குகையே ப்ரயோஜநமோ, சொல்லாயென்கிறார்கள். இப்பாட்டில், ஜாத்யுசிதமான தர்மத்தை ஸாதநபுத்யாவன்றிக்கே கைங்கர்யபுத்யா அநுஷ்டித்தால் குற்றமில்லை யென்கிறது - கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து குற்றமொன்றில்லாதவென்கையாலே. ... ... ... ... ... ... ௧௧

---

அ.—பன்னிரண்டாம்பாட்டு. க்ர்ஷ்ணனைப்பிரியாதே இளைய பெருமாளைப்போலே யிருப்பானொருவன்தங்கையாகையாலே ச்லாக்யையா யிருப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

மூ.—கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர
நனைத்தில்லஞ்சேறாக்கு நற்செல்வன்றங்காய்
பனித்தலைவீழ நின் வாசற்கடைபற்றிச்

சினத்தினாற்றென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப் பாடவுநீவாய்திறவாய்
இனித்தானெழுந்திராய் யீதென்னபேருறக்கம்
அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய். (கஉ)

ப - ரை. க்ர்ஷ்ணனைப்பிரியாதே யிருப்பானொருவனுடைய தங்கையாய்ப் பெருமையையுடையளா யிருப்பாளொருத்தியை, இளம்-இளையதான, கன்று-கன்றுகளையுடைய, எருமை - எருமைகளானவை, பால்கறப்பா ரில்லாமையாலே, கனைத்து - கதறிக்கொண்டு, கன்றுக்கு - தன்கன்றின் விஷயத்திலே, இரங்கி - இரக்கமுற்று, நினைத்து - கன்று ஊட்டுவதாக நினைக்கையாலே, முலைவழியே - முலைவழியாக, நின்று - இடைவிடாமல், பால்சோர-பால்பெருக, அத்தாலே, இல்லம் - அகத்தையெல்லாம், நனைத்து - ஈரமாக்கி, சேறுக்கும்-சேறுகப்பண்ணும், நற்செல்வன் - பகவதநுபவமாகிற நல்லஸம்பத்தை யுடையவனுடைய, தங்காய் - ஸஹோதரியானவளே, பனி - பனியானது, தலை - எங்கள் தலையிலே, வீழ - விழும்படியாக, நின் - உன்னுடைய, வாசல் - வாசக்காலின், கடை - தண்டியத்தை, பற்றி-பிடித்துக்கொண்டு; சினத்தினால்-"பிராட்டியைப் பிரித்தான்" என்கிறகோபத்தாலே, தென் - கட்டளைப் பட்டிருக்கிற, இலங்கை - லங்கையிலுள்ள ராக்ஷஸவர்க்கத்துக்கு, கோமானை-அரசனான ராவணனை, செற்ற - கொன்று, ஆச்ரிதனான விபீஷணனுக்கு அரசளிக்கையாலே, மனத்துக்கு - மநஸ்ஸுக்கு, இனியானை - இனியனாயிருக்கும் சக்ரவர்த்தித்திருமகனை, பாடவும் - பாடாநிற்கச் செய்தேயும், நீ—, வாய்திறவாய்-வாய்திறந்து பேசுகிறிலை; இனித்தான்-எங்களாற்றாமை யறிவித்தபின்டும், எழுந்திராய்-எழுந்திருக்கிறிலை; ஈதென்ன பேருறக்கம் - இதென்ன பெருந்தூக்கம்; நாங்கள் திரண்டுவந்து நிற்கிறமையை, அனைத்தில்லத்தாரும்-ஊராரெல்லாரும், அறிந்தது-அறிந்தார்கள் எழுந்திரா யென்கிறார்கள்.

வ்யா.—(கனைத்து) கறப்பாரில்லாமையாலே முலைகடுத்துக் கதறுகை. (இளங்கற்றெருமை) இளங்கன்றாகையாலே (க)பாடாற்றமாட்

அ.—பன்னிரண்டாம்பாட்டு. பெருமாளைப் பின் தொடர்ந்து நோக்கிக்கொண்டு திரியும் இளையபெருமாளைப்போலே, க்ர்ஷ்ணனையல்ல தறியாதே பின்தொடர்ந்து க்ர்ஷ்ணவிஷயத்திலே போரப் பரிவனாயிருப்பானொருவனுடையதங்கையாகையாலே ஶ்லாக்யையா யிருப்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள். ஸ்வதர்மத்தை யநுஷ்டிப்பார்களுடைய பெண்பிள்ளையை யெழுப்பிற்று-கீழ்; இதில், ஸ்வதர்மத்தைக் காற்கடைக்கொண்டவனுடைய தங்கையை எழுப்புகிறது. அவர்களுடைய அநுஷ்டாநமும் இவனுடைய அநுஷ்டாநமும் உபாயமன்று; யாதொன்று உபேயத்தைத்தரவற்று, அதிறே உபாயம். விடச்சொன்னவையும் பற்றச் சொன்னவையும் அன்றிறே உபாயம்; விடுவித்துப் பற்றுவித்தவனிறே உபாயம்.

வ்யா.—(கனைத்து) உதாரர் கொடுக்கப்பெறாவிட்டால் படுமாப்போலே, ஆஶ்ரிதர்கார்யம் செய்யப் பெறாவிட்டால் "ஸஹஸாப்ரவ்ருத்தம்"

(க) பாடாற்றமாட்டாமை - துக்கம் ஸஹியாமை.

டாமை. (கன்றுக்கு இரங்கி) தன் முலைக்கடுப்புக்கிடக்க, "கன்று
என்படுகிறதோ!" என்றிரங்கி. எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்திலிருக்
கும்படிக்கு நிதர்ஶநமிமே. இத்தால் சொல்லிற்றாய்த்து – அவன்
எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை நாங்கள் உன்
னாலே படாநின்றோமென்கை. (நினைத்துமுலைவழியே) கன்றைநினை
த்து பாவநாப்ரகர்ஷத்தாலே முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு
பால்சொரியாநிற்கும். (முலைவழியே) கைவழிதவிர. (நின்று பால்
சோர) நினைவுமாறாமையாலே, திருமலையில் திருவருவிகள்போலே;
பால்மாறாதேசொரிகை. இவன் எருமை கறவாதொழிவானென்னெ
ன்னில்; இளையபெருமாள் க்ஷத்ரியதர்மமான அக்நிகார்யத்துக்கு
உறுப்பாமன்றிறே இவனெருமைகள் விட்டுக் கறப்பது. அதுவென்

---

"ரிணம்ப்ரவர்த்தம்" என்னுமாப்போலே ஈஶ்வரன், ப்ராப்தகாலத்
தில் கறப்பாரில்லாமையாலேமுலைகடுத்து, இவ்வாசலிலே கன்றுகாலி
யாய், நாம்பட்டதோ!என்றுகுமுறி.கறக்கவேண்டும்போதிலே இவற்
றைக்கறவாதே காற்கடைக் கொள்ளுவா னென்னென்னில்; இளைய
பெருமாளுக்கு அக்நிகார்யத்தில் அந்வயமுண்டாமன்று இவனுக்கு
இவற்றினுடைய ரக்ஷணத்தில் அந்வயமுள்ளது. இளையபெருமா
ளுக்குப் பெருமாளைப் பிரியமாட்டாமையாலே. இவன் க்ர்ஷ்ணனைப்
பிரிய மாட்டாமையாலே. இப்படி பகவத் விஷயத்தில்ப்ரேமத்தாலே
பிரிய அவஸரமில்லாமை ஸ்வதர்மத்தை அநுஷ்டியாதொழிகை-
விடுகையாவது ; அல்லது, ஆலஸ்யத்தாலே விடுமது-விடுகையன்று.
"தொழிலெனக்குத் தொல்லைமால்தன்னாமமேத்தப் பொழுதெனக்கு
மற்றதுவேபோதும்" என்னும்படியே. (இளங்கற்றெருமை) இளங்
கன்றான எருமையென்னுதல்;இளங்கன்றையுடைய எருமையென்னு
தல்.இரண்டாலும் பாடாற்றமாட்டாமை சொன்னபடி. "கறவா
மடநாகு தன்கன் றுள்ளினாப்போல்" என்னக்கடவதிறே. (கன்றுக்
கிரங்கி) தன்முலைக்கடுப்புக்கிடக்க, கன்று என்படுகிறதோ! என்றி
ரங்கி. எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்தில் "ஏழை யேதலன் கீழ்மக
னென்னாதிரங்கி" என்று-அவன் படும்பாட்டுக்கு நிதர்ஶநமாயிருக்கி
றது.அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை, நா
ங்கள் உன்வாசலிலேவந்து நின்று புகுரப்பெறாமையாலே படாநின்
றோம்.(நினைத்து) "[illegible]" "மநஸாசிந்தயத்தரிம்" என்று
நினைத்த வநந்தரம், "[illegible]" "த்வராயைநம:" என்னும்படி
திருவுள்ள மங்கே ப்ரவணமானாப்போலே. (நினைத்து முலைவழியே)
கன்றை யகலக் கட்டிவைப்பார்கள், அத்தைநினைத்து, பாவநாப்ரகர்
ஷத்தாலே கன்று முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு, கைவழியு
மன்றிக்கே கன்றின் வாய்வழியுமன்றிக்கே யிருக்க, முலைவழியே
பால் சொரியாநிற்கும். (நின்று பால்சோர) மேகங்களுக்குக் கடலி

னென்னில்; "నదేవలోకాక్రమణం నామరత్వమహంవ్రణే" "நதேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ரணே" என்னுமாப்போலே. க்ர்ஷ்ணனைப்பிரியக்ஷமனல்லாமையாலே, "పరిత్యక్తామయాలంకా" "பரித்யக்தாமயாலங்கா'' என்னும்படியாலே ப்ராப்யவிரோதிகளில்நசையற்றபடியாகவுமாம். (நனைத்தில்லம்சேருக்கும்) பாலின் மிகுதியாலே அகம் வெள்ளமிடும், அத்தாலே துகையுண்டு சேறாகும். இத்தால் - சேறாகையாலே புகுரவொண்கிறதில்லையென்கை. (நற்செல்வன்) தோற்றிமாயும் ஸம்பத்தன்றிக்கே நிலைநின்ற ஸம்பத்து. அதாகிறது - க்ர்ஷ்ணன் திருவடிகளில் நிரந்தரஸேவை. "లక్ష్మణో లక్ష్మిసమ్పన్నః" "லக்ஷமணோலக்ஷ்மி ஸம்பந்நஃ" என்கிறபடியே - கைங்கர்ய லக்ஷ்மியிறே யிவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து. "லக்ஷ்மி ஸம்பந்நஃ" என்றது, "ஊரும்நாடு முலகமுந் தன்னைப்போல்'' என்கிறபடியே-தன் வைஷ்ணவஸ்ரீயாலே ஜகத்துக்கடைய வைஷ்ணவத்வமுண்டாம்படி

---

லே புக்கு முகந்துகொடு வந்து வர்ஷிக்கவேணும், அவ்வருத்தமிவற்றுக்கில்லை; நினைவு ஊற்றாகச் சுரக்கிற பாலாகையாலே: நினைவு மாறாமையாலே, திருமலையில் திருவருவிகள்போலே பால்மாறாதே செல்லும். (பால்சோர) பகவத்விஷயம் கேளாதே யிருக்க, தன்செல்லாமையாலே சொல்லுவாரைப்போலே. அர்ஜுநன் கேளாதே யிருக்க, "భూయ ఏవ మహాబాహో శృణు మే పరమం వచః" "பூயஏவமஹாபாஹோ ஶ்ருணுமேபரமம்வசஃ" என்றவன் தன்னைப்போலே. (நனைத்து இல்லம் சேறாக்கும்) பால்வெள்ளமிடுகையாலும், எருமைகள் துகைக்கையாலும் சேறாய்க்கிடக்கும். (இல்லம்சேறாக்கும்) எத்தனையேனுமேறிப்பாயாத மேடும் பால் வெள்ளத்தாலே சேறானபடி. கடலை அகழ்செய்துகொண்டுகிடந்தால்,ஓடமேறிப்புகுதல்,சேற்றுக்கு அளற்றுப்பொடியிட்டுப் புகுதல் செய்யவேண்டும்படியிருக்கை.(நல்செல்வன்) கர்மத்தாலேயாதல், தேவதாந்தரபஜநத்தாலே யாதல் வரும் ஐஶ்வர்யம்(க)அந்தவத்தாயிருக்கும்; பெருமாளைப்பிரியாத இளையபெருமாளுடைய ஐஶ்வர்யம்போலே, க்ர்ஷ்ணனைப் பிரிய க்ஷமனன்றிக்கே அவனை நோக்குகிற ஐஶ்வர்யமிறே நிரந்தரஸேவைபோலே நிலைநின்ற ஐஶ்வர்யம். [లక్ష్మణో లక్ష్మిసమ్పన్నః - லக்ஷமணோ லக்ஷ்மிஸம்பந்நஃ] கைங்கர்யஸம்பத்திறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து. "నదేవలోకాక్రమణమ్" "நதேவலோகாக்ரமணம்" என்னும்படியே ப்ராப்யவிரோதிகளில் நசையற்றபடியாலே, தோற்றிமாயும் ஸம்பத்தன்றியிலே யிருக்கை. [లక్ష్మిసమ్పన్నః - லக்ஷ்மிஸம்பந்நஃ] "ஊரும் நாடுமுலகமுந்தன்னைப்போல்" என்று-ஆழ்வாருடைய கைங்கர்யஸ்ரீ விஶேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற ஏறிப்பாய்ந்தாப்போலே, இவனுடைய கைங்கர்ய ஸ்ரீயும் நாட்டுக்கெல்லாம்

---

(க) அந்தவத்து - அழிவையுடையது.

யிருக்கை. (தங்காய்) குண ஹாநிக்கு "𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌜𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾" "ராவணஸ்யாநுஜோப்ராதா" என்னுமாப்போலே குணத்துக்குத் தமையனில் தன்னேற்றமுடையளென்கை.

(பனித்தலைவீழ நின்வாசல் கடைபற்றி) மேல் வர்ஷம் வெள்ளமிட, கீழ் பால்வெள்ளமிட, நடுவு மால் வெள்ளமிட, நின்ற நிலையாகையாலே,தெப்பம் பற்றுவாரைப்போலே நின்வாசற்கடையில்தண்டியத்தைப்பற்றிக்கிடக்கிற இந்ததர்மஹாநிஅறிகிலே. இப்படிசொன்னவிடத்திலும் இவர்கள் படு மலமாப்புக் காண்போமென்றுபேசாதே கிடக்க; (சினத்தினால்) பெண்களைத் தீராமாற்றாக நெஞ்சாறல் பண்ணும் க்ர்ஷ்ணனையொழிய, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக்காக என்று ராமவ்ர்த்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள் (சினத்தினால்) தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோ

---

குறையற்றிருக்கை. (தங்காய்) உங்களுக்கு ரக்ஷ்யவர்க்கத்தை நோக்காமை ஜந்மஸித்தமிறே. (நற்செல்வன்றங்காய்) "𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌜𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾" "ராவணஸ்யாநுஜோப்ராதா" என்று - தமையனுடைய தண்மை சொல்லவேண்டாத ஏற்றமுண்டிறேயுனக்கு. ஸ்ரீவிபீஷணாழ்வானிலும் அவன் மகளான த்ரிஜடை பிராட்டிக்கடிமைசெய்தாப்போலே, க்ர்ஷ்ணனை நோக்கின தமையனிற் காட்டிலும் எங்களை நோக்கவேண்டாவோ. க்ர்ஷணன் ரக்ஷ்யமானபோதே நாங்களும் அந்தர்ப்பூதைகளன்றோ.

(பனித்தலைவீழ) * ஆழிமழைக்கண்ணனிலே வர்ஷிக்க நியமிக்கையாலே, மேல் வர்ஷமாக, கீழ் பால் வெள்ளமிட நின்று அலைகையாலே,தெப்பம்பற்றுவாரைப்போலேதண்டியத்தைப்பற்றிக்கொண்டு நின்றோம். ப்ராப்ய பூமியில்ஐஸ்வர்யம் இங்கே கைபுகுரச்செய்தே அவ்வருகே போகத் தேடுகிறதுஎங்களுடைய அபிநிவேஶாதிஶயமிறே. ஈஶ்வரன் அபிநிவேஶமறிந்து * விள்கை விள்ளாமைவிரும்பி யுள்கலந்தார்க்குத் தன்னைக் கொடுக்குமாப்போலே, இவர்களபிநிவேஶம் அறியுமளவும் பேசாதேகிடக்க, அவள் நினைவறியாதே தங்கள் செல்லாமையாலே சொல்லுகிறார்கள். (சினத்தினால்) பெண்களுக்காகில் சேர்க்கைப்பல்லிபோலே க்ர்ஷ்ணவ்ர்த்தாந்தஞ் சொல்லுகைபணியிறே. "𑌅𑌥𑌵𑌾𑌕𑌿𑌂 𑌤𑌦𑌾𑌲𑌾𑌪𑍈𑌃" "அதவாகிம்த,தாலாபை:"என்று - பெண்களைத் தீராமாற்றமாக நெஞ்சாறல்படும்படி பண்ணுமத்தை நினைத்துக்கிடக்கிறாள். "உண்ணாதுறங்காது" "𑌅𑌨𑌿𑌦𑍍𑌰𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌰𑌾𑌮𑌃" "அநித்ரஸ்ஸததம்ராம:" என்று - பெண்களைப் பிரிந்தால் ஊணுமுறக்கமுமின்றிக்கே, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவளெழுந்திருக்கைக்காக என்று ராமவ்ர்த்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்.

வென்னில்; ஆஶ்ரிதஶத்ருக்கள் இவர்க்கும் ஶத்ருக்களிறே. "𑌤𑌤𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌕𑍃𑌤𑌵𑍍𑌰𑌣𑌮𑍍। 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌲𑌵𑌗𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌂 𑌕𑍋𑌪𑌸𑍍𑌯 𑌵𑌶𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍" "ததோராமோ மஹாதேஜா ராவணேந க்ர்தவ்ரணம்। த்ர்ஷ்ட்வா ப்லவக ஶார்த்தூலம் கோபஸ்யவஶமேயிவாந்." மஹாராஜர்க்குச் சீற்றம்பிறந்தபோது வாலியை யெய்தார், அவரழுதபோது கூட அழுதாரிறே. "𑌦𑍍𑌵𑌿𑌷𑌦𑌨𑍍𑌨𑌂 𑌨 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍" "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" என்றிறே யிருப்பது. (தென்னிலங்கைக்கோமானை) "𑌯𑌦𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌯𑌾𑌦𑌯𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌃। 𑌸𑍍𑌯𑌾𑌦𑌯𑌂 𑌸𑍁𑌰𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑌶𑌕𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾" "யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ரக்ஷஸேஶ்வர:। ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபிரக்ஷிதா" என்று திருவடி மதித்த ஐஶ்வர்யத்தையுடையவனை. (செற்ற) ஓரம்பாலே தலையைத் தள்ளிவிடாதே படையைக்கொன்று, தேரை அழித்து, ஆயுதங்களை முறித்து, "தான் போலும்" இத்யாதி, * கோன்போலு மென்றெழுந்து கிளர்ந்துவந்த

---

விரோதிகளைப்போக்கி நமக்குஉபகரித்தானாயிருக்கும் க்ர்ஷ்ணனைப்போலன்றிக்கே, ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்குமது தன்சினம்தீர்ந்தானாக நினைத்திருக்கை. தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோ வென்னில்; தன் திருமேனியிலே அம்புபட்டபோது ஆறியிருந்தான், திருவடிமேலே அம்புபட்ட போதுசீறினானிறே. [𑌤𑌤𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌃-ததோராமோமஹாதேஜா:] திருவடிமேலே அம்புபட்டவநந்தரம், நீரிலே நெருப்பு எழுந்தாப்போலே,பெருமாள் அநபிபவநீயரானார். [𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌕𑍃𑌤𑌵𑍍𑌰𑌣𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾-ராவணேநக்ர்தவ்ரணம்த்ர்ஷ்ட்வா] தான்பருவம் நிரம்பாத காலத்திலே பண்ணிக்கொண்டதன்றிக்கே தரமல்லாத ராவணனாலே நோவுபடக் கண்டவாறே. [𑌪𑍍𑌲𑌵𑌗𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌮𑍍 - ப்லவகஶார்த்தூலம்] திருவடி, தன் மேலே அம்புபடப்பட, வர்ஷங்காணப் பணைக்கும் பதார்த்தங்கள் போலே, மேனாணித்துக் கொடுத்தான். [𑌕𑍋𑌪𑌸𑍍𑌯 𑌵𑌶𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍 - கோபஸ்யவஶமேயிவாந்] திருவடி தரமல்லாத ராவணன்கையிலே புண்பட்டவாறே; "𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑌾𑌹𑌾𑌰𑌯𑌤𑍍" "க்ரோதமாஹாரயத்" என்றிருக்கக் கடவ தாமும் கோபம் இட்ட வழக்கானார். ஆஶ்ரிதகார்யமென்றும் தங்கார்யமென்றும் இரண்டன்று. மஹாராஜர் சீற்றம்பிறந்து "வாலியைக்கொல்லவேணும்" என்றபோது எய்தார்; அவனுக்கு ஸௌப்ராத்ரம் பின்னாட்டிக் கண்ணநீர்பாய்ந்தவாறே தாமுங் கூட அழுதார். (தென்னிலங்கை) பையல்செய்த அநீதியை நினைத்து "பறைச்சேரி, பறைச்சேரி" என்பாரைப்போல அத்திக்கு மஸஹ்யமானபடி. (தென்னிலங்கைக் கோமானை) "𑌯𑌦𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍" "யத்யதர்மோ ந பலவாந்" என்றும், "𑌅𑌹𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍" "அஹோவீர்யம்" என்றும் திருவடி மதித்த ஐஶ்வர்யமிறே. ஓரம்பாலே தலையைத் தள்ளி விடாதே, படையைக்கொன்று, புத்ரபௌத்ராதிகளைத் தலைசாய்த்து, ஆயுதங்

# ப்ரஸித்த பத்ரிகை.

முதலாயிர வ்யாக்யாந சந்தாக்காரராகச்சேர விரும்புமவர்கள், சென்ற க௮௮0 ஹு மார்ச்சி ௴ தொடங்கி நாளது நோவெம்பர் ௴ வரையில் அச்சிட்டு முடிந்த பாரம் க0௫-இ, பாரம் க-இ-௩-அணா வீதம் ரூ௩-௯-0, முன்பணம் ரூ க, ஆக ரூ௭ ௩ 0 செலுத்தவேண்டும்; தூரதேசசந்தாக்காரர்கள், ஷ ரூ௭-௯-0, தபால்செலவு அணா எட்டு, ஆக ரூபாய் ௮-க-0-இ, அடியிற் கண்டிருக்குமவர் பேருக்கு மணியார்டர் அனுப்பவேண்டும்.

௨. தூரதேச சந்தாக்காரர்கள், ஆறுமாஸத்திய பணம் முன்னதாகச் செலுத்தவேண்டும்.

௩. சந்தாக்காரர்கள், க்ரந்தம் பூர்த்தியாகுமளவும் ஸஞ்சிகைகள் வாங்கவேண்டுமேயொழிய நடுவில் நீங்கக்கூடாது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சந்தாக்காரர்களுக்கு மாதந்தோறும் அனுப்பப்படும் உரப்புக்கடிதத்தில் அச்சிட்ட பாரம் - ௫ - இ. | ,, | ௫ | ,, |

௪. திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இரண்டாவது ஆயிரமான பெரியதிருமொழி, ப்ரதிபதவ்யாக்யாந அரும்பதங்களுடன் அச்சிடத்தொடங்கி, சென்ற ஜூலை, ஸெப்டம்பர், அக்டோபர்மாஸங்களில், ஒன்பதுபாரம் வெளியிடப்பட்டு, இந்தமாஸத்தில், ஆறுபாரமுள்ள மூன்றுவது ஸஞ்சிகை வெளியிடப்பட்டது; இனி, மாதந்தோறும் ஆறுபாரமுள்ளஸஞ்சிகைஒன்று வெளியிடப்படும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மாஸச சந்தாக்காரர்களுக்கு பாரம் க - இ ௯ - பை வீதம் ... ... ... ... | ,, | ௪ | ௬ |
| வருஷச்சந்தாக்காரர்களுக்கு பாரம் க - இ ௮ - பை வீதம் ... ... ... ... | ௩ | ,, | ,, |

க்ரந்தம்முடிந்தபின்பு வாங்குமவர்களுக்கு-பாரம்-க-இ-க-அணா.

௫. மாஸந்தோறும் பணம் செலுத்துமவர்கள், ப்ரதி க - இ ௪ - அணாவீதம் முன்பணம் செலுத்தவேண்டும்.

க௮௮க ஹு நொவெம்பர் ௴ க௨. } சித்ரகூடம் - திருவேங்கடாசார்யர்.

சென்னைநகரையடுத்த திருவல்லிக்கேணி பேயாழ்வார்ஸந்நிதி வீதியில் க௨-வது கதவிலக்கமுள்ள மாளிகை.